

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053 நளி நல்லோரை கார்த்திகைத் திங்கள் 21ம் நாள் (07-12-2022) நிறைமதி வெளியீடு +94 21 221 2739


## கார்த்திகைத் தீபம்



பழந்தமிழர் வாழிபாட்டில் ஒன்றான கார்த்திகைத் தீபத்திருநாள், கார்த்திகைத் திங்கள் 20ம் நாள் (டிசம்பர் 06) திருவண்ணாமலையில் தீபத் திருநாள் வழிபாடுகள் இடம்பெறும். இலங்கையில் அடுத்தநாள் நிறைமதியன்று கொண்டாடப்படும்.

# ஆதிரையான் அருள் பேசும் மார்கழிப் பெருவிழா இம்முறை மார்கழித் திங்கள் 10ம் நாள் (டிச 25), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெறுகிறது



தேர் ஓடும் வீதியில் தேவர் குலத்தார் நாற்றிசையும் நிறைய, நிலவுலகெங்கும் நிறைந்த சிவபெருமானுடைய பழமையான புகழைப்பாடியும், ஆடியும் திரிகின்ற அருமைத் திங்களே மார்கழித் திங்கள் ஆகும். மார்கழித் திங்களானது விழாக்கள், நோன்புகள், வழிபாடுகள் என்று பத்தி நிறைந்தாகும். மார்கழியானது திருவெம்பாவை, திருவாதிரை, ஆதிரையான் அருட்காட்சி, திருவாதிரைக்களி, திருப்பாவை, மார்கழிப் பெருவிழா என பல சிறப்புகளை கொண்டது.

சைவத்தமிழ் மக்கள் பலவாறு மார்கழியை கொண்டாடுகின்றனர். தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் மார்கழிப் பெருவிழாக்கள் நடத்தப்பட்ட போதும், ஈழத்திருநாட்டில் கடந்த வருடம் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும், சைவ மாணவர் சபையும் யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக மார்கழிப் பெருவிழா எனும் கருத்தாக்கத்தில் சிவத்தின் மற்றும் சைவத்தின் பெருமைகளை திருமுறைகள் வழி எடுத்தியம்பும் பிரமாண்ட விழாவாக, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இரு நாட்கள் நான்கு அரங்குகளாக ஒழுங்குபடுத்தி நடாத்தி தொடக்கி வைத்திருந்தமை போற்றுதலுக்குரியதாகும்.

**அதேபோல் இம்முறையும் மார்கழிப் பெருவிழாவை மார்கழித் திங்கள் 10 ஆம் நாள் (டிசம்பர் 25) ஞாயிற்றுக்கிழமை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடாத்தத் திருவருள் கூட்டியுள்ளது. 'யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சைவ சித்தாந்த துறையும் தென்னாடு செந்தமிழாகம சிவமட சைவ மாணவர் சபையும் இணைந்து' முன்னெடுக்கப் போகும் இவ்விழாவிற்கு தமிழ்நாட்டில் இருந்து, தருமையாதீனப்புலவர், திருமுறைக்களஞ்சியம், திரு.எம்.கே பிரபாகர மூர்த்தி அவர்கள் சிறப்புரையாற்றுவதற்காக வருகை தரும் அதே நேரம், குமாரவயலூர் திருமுறைக்கலாநிதி முனைவர். திருஞான பாலசந்திரன் ஓதுவார் (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலை பல்கலைக்கழகம்) அவர்களும் இங்கு தேவார விண்ணப்பம் செய்வதற்கு வருகை தரவுள்ளமை இறை திருவருளேயாகும்.**

பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்காக இம்முறை மார்கழிப் பெருவிழாவானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில், **"தில்லைக்கூத்தன் திருவம்பலம்"** மற்றும் **"திருவாதவூரடிகள் திருவம்பலம்"** எனும் இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளது. கண்ணுதற்பெரும் கடவுளும் கழகமொடு அமர்ந்து பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழை பறைசாற்றும் இப்பெரும் கைங்கரியத்தை சிறப்பாக நடத்தி முடிப்பதற்கு ஐம்பூதநாதர் அருள் புரிவாராக. மேலும் மார்கழியை சிறப்பிக்கும் திருவிழாவான இம்மார்கழிப் பெருவிழாவில் கலந்து கொண்டு, திருமுறைத்தேன் பருகி, தில்லைக்கூத்தனின் அருளுரைகள் கேட்டு, திருவருள் பெற்று உய்யுமாறு, அனைவரையும் மெய்யன்போடு அழைக்கின்றோம். ஆதிரையான் புகழ் கேட்க அனைவரும் அணிதிரண்டு வாரீர்.

உலகமெலாம் உணர்ந்தே ஓதுவர்க்கு அரியவனே போற்றி
உள்ளத்தில் நிலைத்த தில்லை ஆனந்தக் கூத்தனே போற்றி
மாதுமை பாகனாகியே மகிழ்ந்தாடும் ஈசனே போற்றி
மணிவாசகரின் தமிழை எழுதிய மகேசனே போற்றி

திருச்சிற்றம்பலம்

# ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் திருவாதிரை நன்னாள்



முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட, சித்தருள் முதற்சித்தரான, பிறப்பும் இறப்பும் அற்ற பரம்பொருளாகிய 'சிவமே' இவ்வுலகம் முழுவதும் பரந்து விரிந்துள்ளது. அத்தகைய சிவத்தை உணரும் ஆற்றல் பெற்றவர்களே யோகிகளும் சித்தர்களுமாவார். அவர்கள் சிற்றின்ப இச்சைகளை நீக்கி பேரின்ப அனுபவங்களோடு வாழும் பெரியவர்கள். அவர்கள் வழியில் சிவத்தை எம்முள்ளே தேடும் முயற்சியே விரதங்களாகும்.

(02ஆம் பக்கம் பார்க்க)

# பிரதமர் நரேந்திர மோடியின் சிந்தையில் உதித்தது காசி தமிழ்ச் சங்கமம்




உத்தர பிரதேசத்தின் இறைப்பண்புமிக்க பழம்பெரும் நகரமான வாரணாசியுடன் பல நூற்றாண்டுகளாக தமிழகம் கொண்டுள்ள உறவு, பாரம்பரியம், கலாச்சாரத்தின் அடையாளமாக 'காசி தமிழ்ச் சங்கமம்' அமைகிறது. இந்த நிகழ்ச்சியை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் உத்தரவின்படி மத்திய அரசின் கல்வித் துறை முன்னின்று நடத்துகிறது. கடந்த 17ஆம் தேதி தொடங்கிய இந்த நிகழ்ச்சி டிசம்பர் 16ஆம் தேதி வரை நடைபெறும். இந்த தொடக்க நிகழ்ச்சியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் கலந்து சிறப்பித் திருந்தார். இந்நிகழ்ச்சியை சிறப்பாக நடத்துவதற்கு மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலா, ரயில்வே மற்றும் ஆடைத் துறை அமைச்சகங்களுடன், உ.பி. மாநில அரசும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது.

இதற்காக தமிழகத்தில் இருந்து சுமார் 2,500 பேர் ரயில்களில் அழைத்துவரப்பட்டனர். சுமார் 200 பேர் கொண்ட 12 குழுக்களுக்கு தலா 8 நாட்கள் பயணம் ஏற்பாடு செய்யப்படுகிறது. நவம்பர் 17-ம் தேதி தொடங்கி ஒரு திங்கள் நடைபெற உள்ள சங்கமம் நிகழ்ச்சியில் சுமார் 4,000 தமிழர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் அமைப்பாளரும் பேராசிரியர் சாமுகிருஷ்ண சாஸ்திரி, 'இந்து தமிழ் திசை' நாளிதழிடம், தகவல்களைப் பகிர்ந்து கொண்டார்.

இது மாபெரும் சங்கம விழாவாக வாரணாசியின் பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் நடைபெறுகிறது. நூல்கள், கலை, பண்பாடு, ஓவியங்கள், கண்காட்சி, கருத்தரங்குகள், பயிலரங்கங்கள், கலந்துரையாடல்கள், 30 வகையான நாட்டுப்புறக் கலைகள், நாட்டியங்களுடன் சங்கமம் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இவை அனைத்தும் முழுக்க முழுக்க தமிழக பாரம்பரியத்தை உலகளவில் வெளிப்படுத்தும் வகையிலேயே அமையும்.

வாரணாசி அறிஞர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் இந்நிகழ்ச்சியில் ஆர்வமுடன் பங்கேற்று வருகின்றனர். இதன்மூலம், தமிழக மக்களின் அறிவு, வாழ்க்கை முறை போன்ற பல்வேறு பரிமாணங்களை மற்றவர்களும் அறிய முடியும். இத் தொடக்க விழாவில் இந்திய சைவ ஆதீனங்கள் பலவும் பங்களிப்பை செலுத்தி யிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

திருச்சிற்றம்பலம்

# யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சைவ சித்தாந்த துறையும் தென்னாடு செந்தமிழாகம சிவமட சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும் 'மார்கழிப் பெருவிழா-2022'

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சைவ சித்தாந்த துறையும் தென்னாடு செந்தமிழாகம சிவமட சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை மார்கழித் திங்கள் 10 ஆம் நாள் (டிசம்பர் 25) ஞாயிற்றுக்கிழமை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடாத்த திருவருள் கூட்டியுள்ளது.

## மார்கழித் திங்கள் 10 ஆம் நாள் (டிசம்பர் 25) ஞாயிற்றுக்கிழமை

காலை 8 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரமேசுவரர் திருக்கோயில் வழிபாட்டுடனும் தேவாரத் திருமுறை, நால்வர் எழுந்தருளலுடன் அமர்வுகள் ஆரம்பமாகும்.

### காலை அமர்வு - தில்லைக்கூத்தன் திருவம்பலம்
(காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை)

- திருவிளக்கேற்றலும் அம்பலவாணர் அருள்வழிபாடும்
- அருள் உரை - தவத்திரு. மீனாட்சி சுந்தரம் தம்பிரான் சுவாமிகள் (தருமை ஆதீன திருச்சி மௌன மட மற்றும் இலங்கை திருக்கேதீச்சர மட தம்பிரான் சுவாமிகள்)
- தொடக்கவுரை - கலாநிதி. பொன்னுத்துரை சந்திரசேகரம் (தலைவர் - சைவ சித்தாந்தத் துறை, யாழ். பல்கலைக்கழகம்)
- தலைமையுரை - பேராசிரியர். சி. சிறிசற்குணராசா (துணைவேந்தர் - யாழ். பல்கலைக் கழகம்)
- திருமுறை விண்ணப்பம் - குமாரவயலூர் திருமுறைக்கலாநிதி. முனைவர். திருஞான பாலச் சந்திரன் (ஓதுவார், தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
- சிறப்புரை - தலைப்பு - 'அண்ணலார் உளர் அஞ்சுவது என்னுக்கே'
  வழங்குபவர் - தருமை ஆதீனப்புலவர், திருமுறை களஞ்சியம், சிவத்திரு. எம்.கே. பிரபாகர் மூர்த்தி அவர்கள்
- கௌரவிப்பு நிகழ்வு - கொடையாளர்களை சிறப்புச் செய்யும் நிகழ்வு

## அடியார் தமக்கு அமுது செய்விக்கும் நிகழ்வு - 12.30 முதல் 1.30 மணி வரை

### மாலை அமர்வு - திருவாதவூரடிகள் அமர்வு
(1.30 மணி முதல் 5.30 மணி வரை)

- அருள் உரை - தவத்திரு. அகத்தியர் அடிகளார் (தென் கயிலை ஆதீன குருமுதல்வர்)
- தொடக்க உரை - சிவத்திரு. செந்தமிழ்தன் (நிர்வாகச் செயலாளர் - சைவ மாணவர் சபை)
- தலைமை உரை - சிவத்திரு. நல்லையா விஜயசுந்தரம் (தலைமை ஆசிரியர் - வலம்புரி பத்திரிகை)
- திருமுறை விண்ணப்பம் - குமாரவயலூர் திருமுறைக்கலாநிதி. முனைவர். திருஞான பாலச் சந்திரன் (ஓதுவார், தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
- சிறப்புரை - தலைப்பு - 'எது எம்மை பணிகொள்ளும் ஆறது கேட்போம்'
  வழங்குபவர் - தருமை ஆதீனப்புலவர், திருமுறை களஞ்சியம், சிவத்திரு. எம்.கே. பிரபாகர் மூர்த்தி அவர்கள்
- திருவாசக கட்டுரைப் போட்டிக்கான பரிசில் வழங்கல்
- நன்றியுரை - சிவத்திரு. வனராஜ் சசிராஜ் (பொதுச் செயலாளர் - சைவ மாணவர் சபை)

நிகழ்ச்சி முன்வைப்பு - சிவத்திரு.செந்தமிழ்தன் (நிர்வாகச் செயலாளர் - சைவ மாணவர் சபை) மற்றும் சிவத்திரு. பாலுசாமி சிவமாதவன் (ஆசிரியர் - தென்னாடு திங்கள் இதழ்)

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

திருச்சிற்றம்பலம்

ஊனினை உருக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு பல விரதங்கள் இருந்தாலும், மார்கழித் திங்களில் நாம் தவமியற்ற புண்ணிய காலமாக கொள்ளும் திருவெம்பாவை விரதமும், ஆதிரை நன்னாள் விழாவும் மகத்துவம் மிக்கது.

சிவனுக்குரிய விரதங்களுள் திருவாதிரை சிறப்பு மிக்கதாகும். தேவர்க்கும் தேவனாகிய இறைவனின் ஆதிரை நன்னாள் காண, எல்லாத் தேவர்களும் அவன் புகழ் பாடி கூத்தும் ஆடி, விரைந்து வந்தனர் என சேந்தனார் பெருமான் கூறிப் போகின்றார். திருவாதவூரடிகள் 'திருவெம்பாவை' என்றும், அப்பர் பெருமான் ஆரூர் திருப்பதிகங்களான பத்துப்பாடல்கள் மூலம் ஆதிரை நாளின் சிறப்பை போற்றிச் சொல்கின்றார். மேலும் தில்லைக்கூத்தனின் ஞானக்குழந்தை ஆகிய திரு ஞானசம்பந்தர்,

"ஊர்திரை வேலையுலாவும் உயர்மயிலைக்
கூர்தரு வேல் வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாய்"

என்று திருப்பதிகம் அருளி, சாம்பலில் இருந்து பூம்பாவைக்கு உயிர்கொடுத்த வரலாற்றை உயர்வோடு போற்றுகையில் அங்கும் ஆதிரை நாளுக்கான சான்றும், அதன் மகத்துவமும் எடுத்து இயம்பப்படுகின்றது.

வரலாற்றுச் சான்றுகளதும், இலக்கிய ஆதாரங்களதும் அடிப்படையில், சைவத்தமிழர்களின் ஆதி விரதமாக இருக்கின்ற ஆதிரை விரதம், குறிப்பாக பெண்கள் போற்றி வழிபட்டதையும், பத்து நாட்கள் அவர்கள் விரதமிருந்து அதிகாலையில் துயில் நீங்கி, பனி, குளிரினை பொருட்படுத்தாது, தம் தோழியரை உடன் அழைத்துக்கொண்டு நீராடச் சென்று, பின் இறைவனின் புகழைப்பாடி உய்வு கொண்டனர்.

சிவனுக்குரிய நாண்மீனான திருவாதிரை, ஆதிமுதல் நாண்மீன் என்று வானியல் ஆய்வாளர் சொல்லுவார்கள், அந்த நாண்மீன் மார்கழி நாளில் கூடும் போது ஆதிரை நாள் நீராட்டு, அண்டத்தின் இயக்கத்துக்கு அடிநாதமாக விளங்கும் நடராசருக்கு இடம்பெறுதல் தனிச் சிறப்பேயாகும். இம்முறைத் திருவெம்பாவையானது மார்கழித் திங்கள் 12ம் நாள் (டிசம்பர் 27) தொடங்கி, இறுதி நாளாகிய மார்கழித் திங்கள் 21ம் நாள் (சனவரி 06) திருவாதிரை நன்னாளன்று ஆதிரை அருட்காட்சியும் இடம்பெறும்.

எனவே உயிர்கள் எல்லாவற்றிற்கும் மூலமும் முதலுமான, சிவனை நினைந்து கைக்கொள்ளும் ஆதிரைநாள் விரதம் இருந்து தீவினைகளைக் களைவோமாக.

திருச்சிற்றம்பலம்




சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# மார்கழிப் பெருவிழாவுக்கு வருவோம்!

திங்கள்களில் மார்கழி மகத்துவமானது. காலந்தோறும் தமிழர்கள் சைவத்தின் வழிபாட்டு நடைமுறைகளுடாக மார்கழியை கொண்டாடி மகிழ்ந்தனர். தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் மார்கழிப் பெருவிழாக்கள் நடத்தப்பட்ட போதும், ஈழத்திருநாட்டில் மார்கழிப் பெருவிழா முறையாக நடாத்தப்படாமை பெருங்குறையாக இருந்ததை நீக்க கடந்த ஆண்டு, தென்னாடு செந்தமிழாகம சிவமடமும் சைவ மாணவர் சபையும் இணைந்து, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இரு நாட்கள் நான்கு அரங்குகளாக மார்கழிப் பெருவிழாவை நடாத்தி நிறைந்திருந்தமை யாவரும் அறிந்ததே.

அதேபோல் இவ்வருடமும் மார்கழிப் பெருவிழாவை 'மார்கழித் திங்கள் 10 ஆம் நாள் (டிசம்பர் 25) ஞாயிற்றுக்கிழமை', நடாத்த திருவருள் கூட்டியுள்ளது. 'யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சைவ சித்தாந்த துறையும் தென்னாடு செந்தமிழாகம சிவமட சைவ மாணவர் சபையும் இணைந்து' முன்னெடுக்கப்போகும் இவ்விழாவிற்கு தமிழ்நாட்டில் இருந்து, தருமையாதீனப்புலவர், திருமுறைக்களஞ்சியம், திரு.எம்.கே பிரபாகர மூர்த்தி அவர்கள் சிறப்புரை ஆற்றுவதற்காக வருகைதரும் அதே நேரம், குமாரவயலூர் திருமுறைக்கலாநிதி முனைவர். திருஞான பாலசந்திரன் ஓதுவார் அவர்களும் இங்கு தேவார விண்ணப்பம் செய்வதற்கு வருகை தரவுள்ளமை. யாழ்ப்பாண மக்களின் சைவ எழுச்சிக்கு உந்துதல் தரும் என ஒரு சேர அகம் மகிழ்வோம்.

காலம் எமக்கு தரும் கடமைகளை எம் சமயம் சார்ந்தும், மொழி சார்ந்தும் செவ்வனே செய்ய காத்திருக்கும் தென்னாடு செந்தமிழாகம சிவமடமும் சைவ மாணவர் சபையும் இப் பத்திரிகையினை வாசித்துக் கொண்டிருக்கும் சைவ அன்பு உள்ளங்களின் ஆதரவையும், எதிர்பார்த்து நிற்கின்றது. பொருட் செலவிலும், உடல் உழைப்பிலும் உருவாகும் ஒரு நிகழ்வு, சிறந்து ஓங்க, பார்வையாளர்களின் வருகையும், இளைய பிள்ளைகளின் பங்கேற்பும் இன்றியமையாதவை என்பதை உணர்ந்து, இச் செய்தியை பட்டி தொட்டி எங்கும் பரப்புவோம். அருமையான இரு தலைப்புக்களில் இடம்பெறவுள்ள, சிறப்புரைகளையும், திருமுறை விண்ணப்ப தேன் சுவையும் பருக எம்மவர்களை, இம் மார்கழிப் பெருவிழா எம் வீட்டு திருவிழா எனச் சொல்லி அழைப்போம்.

தமிழர்களின் கல்வி தலைமைப்பீடமான யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கல்வியலாளர்களின் நெறிப்படுத்தலும், தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் வழிப்படுத்தலும், சைவ மாணவர் சபையின் செயற்படுத்தலும் இணைந்த இப் பெருவிழாவிற்கு இளையவர்களின் பங்களிப்பு, அவர்களின் எதிர்கால சைவ வாழ்வுக்கும், சித்தாந்த அறிவிற்கும் முதற்தடமாக அமையலாம். ஒழுக்கம் குன்றிய சமூகம் என்கிற சேறு போதையால் எம் மீது திட்டமிட்டு பூசப்படும் இக்காலத்தில், நல்லொழுக்க சீலர்களாய், நாளைய நம் தலைவர்களாய் எமது அடுத்த தலைமுறை நிமிர்வதற்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டியது எம் எல்லோரதும் கடமையல்லவா?

பாடசாலைகள் முதல் பல்கலைக் கழகங்கள் வரையுள்ள எம் பிள்ளைகளை, மார்கழிப் பெருவிழாவுக்கு அழைப்போம்! வருடம் தோறும் இப் பெருவிழா இந்த மண்ணில் இடம்பெற வேண்டும் என்கின்ற வேண்டுதலையும், அதன் மூலம் இந்த மண் பயனுற வேண்டும் என்பதையும் எம் ஆவலாய் வெளிப்படுத்துகின்றோம்! எனவே, எம் சைவத் தமிழ் உறவுகளே, தாய் நிலத்தின் நாளைய தலைவர்களே, வரும் மார்கழித் திங்கள் 10 ஆம் நாள் (டிசம்பர் 25) ஞாயிற்றுக்கிழமை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக, 'கைலாசபதி அரங்குக்கு' மார்கழிப் பெருவிழாக் காண பேரெழுச்சியுடன் வருவோம்!

**"அம்பலத்துள் ஆடுவான் அடிகாண,**
**முன்னெமக்கு அருளியவன் புகழ்பாட,**
**மறுமைக்கும் துணையான சிவம் தேட**
**மார்கழிப் பெருவிழா காண வருவோம்!"**

**திருச்சிற்றம்பலம்**




சிவத்திரு.யாழவன் சிவவேதன்,
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (70) 770 1111, sivavethan@thennadu.org



# மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

இயற்கையின் இயல்புக்கேற்ப ஒரு பொருள் இயங்குகின்ற போது தான், அந்தப் பொருள் இயற்கையின் ஓட்டத்தில் நின்று நிலைக்கும். இயற்கைத் தேர்வு, கூர்ப்பு என்று பொது அறிவியல் அதனை வரையறுக்கின்றது. உலகின் மீதுள்ள அனைத்துப் பொருட்களுக்கும் இந்த இயல்பு சாலப் பொருந்தும். ஒரு உயிரி சூழலுக்கு ஏற்ப தன்னை கூர்ப்படைய வைக்காவிடின், அந்த உயிரியின் தொடர்ச்சித்தன்மை பூமியில் கேள்விக் குறியே. காலத்துக்குக் காலம் மாற்றமும், மீட்டுருவாக்கமும் இன்றியமையாதவை. அவையே நிலைத்திருப்பு எனும் அறுவடையை நோக்கி பயிரை வளர்க்கின்றன.

சைவசமயம் பெருஞ்சமயம், செஞ்சமயம் என்று நாம் பெருமை கொண்டு எம் சமயத்தை புகழ்ந்துரைப்பதற்கான காரணங்களுள் ஒன்று சைவசமயம் காலத்திற்கு காலம் சீர்பெற்றமை ஆகும். அதனாலேயே தான் சைவசமயம் இன்றும் செழிப்புடன் நிலைபெற்று வருகின்றது. சைவத்தின் வாழ்வு தன்னை இருள் கவ்விய சமயங்கள் தோறும் அருளாளர்கள் உதித்தார்கள். அந்தக் காலச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு சைவத்தை வளப்படுத்தியதோடு வலுப்படுத்தவும் செய்தார்கள். இத்தன்மையினால் தான் சைவ சமயம் பிறசமயங்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு தன்னை நிலை நிறுத்திக் கொண்டது.

சங்கமருவிய காலத்தில் சைவசமயம் தொய்ந்த போது அதைக்காக்க 'காரைக்கால் அம்மையார்' வந்துதித்தார். பின்னர் சைவம் தழைத்தோங்க 'திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்' அவதரித்தார். காலம் தோறும் அவதரித்த ஒவ்வொரு அருளாளர்களும் அவர்தம் காலத்தின் தேவைக்கு ஏற்றவாறு சைவத்தை வலுப்படுத்தினர். தனியே நாயன்மார் மாத்திரம் இதனைச் செய்யவில்லை, அருணகிரிநாதர் முதலிய அடியார் முதற்கொண்டு சித்தர்கள் பலர் வரை இப்பட்டியல் நீளுகின்றது. காலம் தோறும் திருஅவதாரஞ்செய்து சைவத்தை மீட்டு எடுத்த அருளாளர்கள் மாத்திரம் இல்லையென்றால் இன்று சைவத்தின் நிலை கேள்விக்குறியே!

இன்றைய உலகியலிலும் அவ்வாறான ஒரு தேவை சைவத்திற்கு உண்டு. சைவமாம் பொன் விளக்கின் மீது சில அழுக்குகள் உறைந்து கிடக்கின்றன. அந்த அழுக்குகளைத் தேய்த்து எடுத்து பொன்னாகிய சைவத்தை மிளிர வைக்க வேண்டிய கடமை அனைவரிடத்தும் உண்டு. அந்தக் கடமை சரிவரச் செய்யப்படுகின்ற போது தான், சைவம் தன்னை புதுப்பித்துக் கொள்ளும். காலத்திற்கு காலம் அருளாளர்களை அனுப்பி வைக்கின்ற இறைவன் இப்போதும் கட்டாயம் அனுப்பி வைப்பான். அந்த அருளாளர்கள் தோன்றும் போது அவர்களோடு இணைந்து சமூகம் செல்லத் தலைப்படுகின்ற போது தான் அது வெற்றியளிக்கும்.

மதுரையை மீட்ட சம்பந்தரின் வெற்றியென்பது தனியே தனி ஒருவரின் வெற்றியல்ல. மங்கையர்க்கு அரசியார், குலச்சிறையார் முதலியவர்களின் கூட்டு வெற்றியே அவ்வெற்றி. தான் உண்டு தன் வேலை மட்டும் உண்டு என்று அப்பெண்மணி இருந்திருந்தால் இன்று என்ன நடந்திருக்கும் என்று ஒரு நிமிடம் நினைத்துப் பாருங்கள். அது தான் சைவத்தின் நாளைய தேவைக்கான இன்றைய நிலையும்.

இன்றைய வாழ்வியல் அடிப்படையிலே சைவசமயத்தின் நிலையை ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்போம். கோயிலை அண்மித்த வாழ்வியல் எம்வாழ்வில் இருந்து தொலைந்தே போய்விட்டது. கேளிக்கைகளின் கூடாரமாகச் சில கோயில்கள் மாற்றமடைந்து வருகின்றன. கடவுளையும் பத்தியையும் தவிர அனைத்தும் வாழ்கின்றன சில கோயில்களில். இந்தப்பெரும் பழியை நீக்க வேண்டியது ஒவ்வொரு சைவரினதும் கடமை. உட்சிதைவைக் கவனியாது வெளியே பூசிமூடி வெளிச் சிதைவை இல்லாதொழித்து ஒரு பயனும் இல்லை.

இவற்றைத் தாண்டியும் செய்ய வேண்டிய செயல்கள் நிறைய உள்ளன. சைவத்தை ஒரு நெறிமுறையின் கீழ் ஒழுங்குபடுத்தி சைவர்கள் எப்போது ஒற்றுமைப்படுகின்றோமோ அப்போது தான் சைவம் வலுப்பெறும். அதற்கான அடித்தளத்தை இட்டு சைவத்தை மீட்க வேண்டிய கடமை எம்மிடம் உள்ளது. வயிற்றுப்பசி போக்கும் பணியை கோயில்கள் செய்வது போற்றுதலுக்கு உரியது. அத்தோடு சேர்த்து அறிவுப்பசியையும் கோயில்கள் தான் தீர்க்க வேண்டும். கோயில்கள் தோறும் சொற்பொழிவுகள் மற்றும் புராண படன நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும். உலகம் முழுவதுமுள்ள சைவ அமைப்புகள் தமக்குள் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் ஒருங்கிணைய வேண்டும். இவை வெற்றிகரமாக இயங்குகின்ற போது தான் சைவத்தின் நிலைமையும் மீட்சி பெறும். சைவமாம் சமயத்தைக் காக்க ஒன்று சேருவோம். சைவத்தின் மீயுயர் சிறப்பை இலக்காகக் கொண்டு எம்முள் இருக்கின்ற வேற்றுமைகளைப் புறந்தள்ளி ஒற்றுமைகளைப் பொதுவில் வைத்து ஒன்றிணைவோம்.

**"வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்**
**கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க**
**நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க**
**மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்"**

**திருச்சிற்றம்பலம்**

# இறந்தவர்கள் உண்பார்களா?

## ஒரு தமிழ் மரபாய்வு



முனைவர்.
இரா.சிவகுமார்,
(மலேசிய அறிவியல் பல்கலைக்கழகம்)



(சென்ற திங்கள் தொடர்ச்சி )

நுண்ணுடல் அறிவு தமிழர்களிடையே பண்டையக் காலம் தொட்டே இருந்துள்ளது. சங்கத்தமிழ் முழுதும் செவ்வியல் அறிஞர்களால் பல்வேறு நிலைகளில் நுண்ணுடல் ஆய்வுகள் செய்யப்பட்டு வெளிக்கொணரப்பட்டுள்ளன.

முதலில் நுண்ணுடல் அல்லது சூக்கும உயிர்கள் உள்ளனவா? அவை உணவு உண்ணுமா? போன்ற கேள்விகளுக்கு சில எடுத்துக்காட்டுகள்:

**நுண்ணுடல் அல்லது சூக்கும உயிர்கள் உள்ளனவா ?**

உண்டு என்பதுவே தமிழர்களின் உயிர்ப்புலக்கூர்வு ஏரண அறிவியலாகும். உயிர்ப்புலக்கூர்வு ஏரண அறிவியல் மிக நுட்பம் என்பதால் விரிவுக்கு ( சிவகுமார் , 2022டி ) காணவும்.

நுண்ணுடல் அல்லது சூக்கும உயிர்கள் உள்ளன என்பதற்கான சங்கத்தமிழ், தெய்வத்தமிழ் எடுத்துக்காட்டுகள் பல:

**“விண்ணின் றமரர் விரும்பி அடிதொழ”** - திருமந்திரம் 968
விண்ணின் றமரர் என்பவர் யார்? தூல உடல் மனிதர்களா?

**“வானோர்க்கும் ஈண்டு”** (வான் சிறப்பு குறள்:18)
**“வானோர் தங்கள் வடிவின்”** (சிலப். பதிகம், 52).
**“வானோர் மறைமா தவத்தோர் வழிபட்ட”** (திருமுறை 2.037.5)
வானோர், மறை மாதவத்தோர் என்பவர்கள் யார்? துல உடல் மனிதர்களா ?

**“அணங் குருத் தன்ன கணங்கொ டானை”**(புறநா. 362:6)
அணங்கு என்பது யார்? தூல உடல் மனிதர்களா ?

**“பேயாய்க் கணங்களாய் வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்”**
(திருவாசகம்/சிவபுராணம் 26-32)
பேயாய்க் கணங்களாய் வல்லசுரராகி முனிவராய்த் தேவராய் என்பர் யார்? தூல உடல் மனிதர்களா ?

**“விஞ்ஞானர் கேவலத் தாராது விட்டவர்
தஞ்ஞானர் அட்டவித் தேசுரம் சார்ந்துளோர்
எஞ்ஞானர் ஏழ்கோடி மந்திர நாயகர்
மெய்ஞ்ஞானர் ஆணவம் விட்டுநின் றாரே.” ( திருமந். 10.2.15.2)**

கேவலத் தாராது விட்ட விஞ்ஞானர், அட்டவித் தேசுரம் சார்ந்த தஞ்ஞானர், ஏழ்கோடி மந்திர நாயகர் எஞ்ஞானர், ஆணவம் விட்டுநின்ற மெய்ஞ்ஞானர் இவர்களெல்லாம் யார்? தூல உடல் மனிதர்களா ?

இப்படி பல நுண்ணுடல் உயிர்கள் உள்ளன என்பதை நமது செவ்வியல் புலவர்களும், தெய்வ அடியார்களும் தங்களின் சான்றாண்மையில் தெளிவு செய்துள்ளனர்.

**அடுத்தக் கேள்வி நுண்ணுடல் அல்லது சூக்கும உயிர்கள் உணவு உண்ணுமா?**

**எடுத்துக்காட்டு 1:**
**“அருந்தவர்கள் துய்ப்பனவும் காணாதே போதியோ பூம்பாவாய்”** - (திருஞான. திருமு. 503, திருமறை இங்கு நுண்ணுடல் (சூக்கும காயம் கொண்ட ) அருந்தவத்தோர், கபாலீச்சரம் இறங்கி , உணவு துய்ப்பனர் (அருந்தவமுனிவர் அமுதுண்பர்) என்று திருஞானசம்பந்தர் பாடியுள்ளார்.

**எடுத்துக்காட்டு 2:**
**“உண்ணும் மருந்தும் உலப்பிலி காலமும்
பண்ணுறு கேள்வியும் பாடலு மாய்நிற்கும்
விண்ணின் றமரர் விரும்பி அடிதொழ
எண்ணின் றெழுத்தஞ்சு மாகிநின் றானே “** - திருமந்திரம் 968

அமுதம் உண்டு, அதன் பயனாகிய நீண்ட வாழ்நாளினையும் பெற்று, அவர்கட்கு விருப்பத்தைத் தருகின்ற இசை, பாட்டு என்று துய்த்து நிற்கும் விண்ணின் அமரர்கள் எல்லா இன்பங்களையும் பெற்றிருந்தாலும் அவர்கள் இறைவனை விரும்பி அடிதொழுவர். ஏன்? இறைவன் ஆக்கம் ,நிலைப்பு, ஒடுக்கம், மறைப்பு, அருளல் எனும் நம சிவாய ஐந்தெழுத்தாய் நிற்பவன்.

**எடுத்துக்காட்டு 3:**
**“சங்கப்புலவர் மாங்குடிமருதனார் தூல காயம் நீத்த உடல் குருதி உண்ணும் என்பார். நிண வாய் பெய்த பேய் மகளிர்”**-(மது. 24-28)
**பொருள்:** போரிலே வீழ்ந்த நல்ல தந்தங்களை உடைய யானை பிணங்களின் குருதியைக் குடித்து, சிதறிக் கிடந்த குறைதலைப்பிணம் எழுந்து தன்னோடு ஆடும்படி பேய்மகள் தணங்கைக் கூத்தாடுவாள் .

**“நிணம் தின் வாயள் துணங்கை தூங்க”** - திருமுருகாற்றுப்படை 56
**“பிணம் தின் யாக்கை பேய்மகள் துவன்றவும்”** - பட்டினபாலை 260

இவ்வாறு பிணத்தையும், பிணத்திலுள்ள நிணத்தையும் தின்கின்ற பேய்கள்,, சில நேரங்களில் நிணத்தை அப்படியே அள்ளி அள்ளி வாய்க்குள் அப்பிக் கொள்கின்றனவாம்.

**“கருமறிக் காதின் கவை அடிப் பேய்மகள் நிணன் உண்டு சிரித்த தோற்றம் போல”** - சிறு 197,198

அதுபோல காரைக்கால் அம்மையார் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்களை படித்தாலே நுண்ணுடல் உயிர்களின் அறிவினை தெளிவாகப் பெற்றுவிடலாம். இதுபோல பல எடுத்துக்காட்டுகளைக் காட்டலாம். மீண்டும் கேள்வி என்னவென்றால், தூல உடல் இல்லாத அருந்தவத்தோர், விண்ணின் றமரர் , தேவர்கள், பேய்கள் போன்ற உயிர்கள் எப்படி உணவுகளைத் துய்ப்பனர் என்பதுவே?

உயிர்கள் காரண உடல், கஞ்சுக உடல், குண உடல், சூக்கும உடல், தூல உடல்கள் பொருந்தி அவற்றில் கட்டுண்டு நிற்கின்றன என்பது தெளிவு.

விரிவு அஞ்சி இவற்றின் ஏரணங்கள் இங்கு விளக்கப்பட



இயலவில்லை அது நிற்க.

ஆகவே தூல உடல் நுண்ணுடல் ஏரணம் பேசுவோர் உயிர்ப்புல கூர்வு அறிவியலைச் சங்கத்தமிழ், சித்தாந்தம், தேவாரம், திருமந்திர நூல்களில் மேலும் முறையாகப் ஏன் படிக்க வேண்டும் என்பதற்கான தெளிவு நமக்குக் கிடைக்கும். தூல உடல் நுண்ணுடல் தேவையைச் சங்கத்தமிழ், தெய்வத்தமிழ், சைவசித்தாந்தத்தின் வழி, தெளிவற கற்றவர் உயிரின் புசிப்பு அறிவியலைப் புறந்தள்ள மாட்டார். உயிரின் புசிப்பு என்ன என்று சிந்திக்க முற்படுவாரேயன்றி, மரபு திரிக்க முயலமாட்டார்.

**3. “இறைவனும் அது போல உண்பதில்லை” என்ற கருத்தை சில பகுத்தறிவுவாதிகள் முன்வைக்கின்றனர். இது தமிழ் மரபில் ஏற்கக்கூடிய ஒன்றா? அப்படியானால் இறைவனுக்குப் பச்சிலை(வில்வம், அருகம்புல்,அரச இலை,), பழங்கள், தானியங்கள். நீர் போன்ற பல்வேறு உணவுகள் அளிப்பதின் நோக்கம் என்ன? பயன் என்ன?**

**இதற்கான மறுப்பு :**

மிக நுட்பமாக தெளிவுசெய்யபட வேண்டிய ஒரு கருதுகோளாகும்.

மீண்டும் நமது ஞானியர், சங்கப்புலவர்கள் எதற்காக இறைவனுக்கு உணவு அளிக்க வேண்டினர் என்பதைத் தெளிவாக விளக்க வேண்டிய கடப்பாடு நமக்குள்ளது.

**எடுத்துக்காட்டு:**
**கேள்வி:** இறைவன் உண்பதில்லை என்றால் “யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை” ( திருமந்திரம் 10.119 .19. 2)’ யாருக்கு என்று ஒரு கேள்வி எழும். உண்ணாத இறைவனுக்குத் திருமூலர் உணவு வைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்க என்ன காரணம் ? திருமூலர் யாவர்க்கு மாம்இறை வற்கொரு மந்திரம் என்று வேண்டுகோள் விடுக்காது ஏன் பச்சிலை என்றார் ?

மேலும்
**“பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்து உனக்கு நான் தருவேன்- கோலம்செய்”** நல்வழி ஒளவை தமது வழிபாட்டில் உணவுவைத்து வேண்டுகிறார்.

**“சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்”** (4.001.6) என்று அப்பர் சலம்(நீர்), பூ வைத்து வழிபடுகிறார்

கடவுளுக்குப் படைக்கப்படும் பலவிதமான உணவுப்பொருள்களும் சங்கத்தமிழில் பண்ணியம், பலி, அவி என்றெல்லாம் அழைக்கப்பட்டன.

**“ கூழ் உடைக் கொழு மஞ்சிகை
தாழ் உடை தண் பணியத்து
வால் அரிசிப் பலி சிதறி**



**பாகு உகுத்த பசு மெழுக்கின்”** - பட்டினப்பாலை 163 - 166

என்ற பட்டினப்பாலை அடிகள் மூலம் இதனை அறிகிறோம்.

அதுபோல சங்கத்தமிழில் அடிசில் (கற்கண்டுச் சாதம்), அமலை(மிகுதியான சோற்றுத்திரள்), அயினி (விருப்பத்துடன் வேண்டுமளவு உண்ணும் உணவு), அமுது( அமிர்தம், அமுதம், அமிழ்தம்), உண்டி, உணவு, ஊண், கருனை(பொரித்த உணவு), கலவை, களி, குறை(துண்டுகள்), கூழ்,சூடு, சொன்றி(அரிசிச் சோறு), சோறு தடி (மாமிசத்துண்டு), தாரம்(விலையுயர்ந்த உணவுப்பண்டம்), திற்றி(வேகவைத்த இளம் தசை), துழவை(இளக்க களி வகை),நுவணை(இடித்த மா), பண்ணியம்(தின்பண்டம்), பதம் (பக்குவ உணவு -அவிழ்), பிளவை(பிளக்கப்பட இறைச்சித் துண்டு), புழுக்கல் (புழுங்கலாக வேகவைத்த உணவு), பொம்மல் (குவித்த உணவு), மிதவை (சோறு, கூழ், கும்மாயம்), மிளிர்வை (மீன்குழம்பு), மூரல் (சரியான பதத்தில் வெந்த உணவு), மோதகம்,வத்தம்(அரிசிசோறு), வட்டம்(தின்பண்டம்), வல்சி(உண்டு உயிர்வாழும் உணவு), வறை(பொரித்த கரி), வாட்டு (வதக்கு - சழயளவ உணவு), வாடூன்(உப்புக்கண்ட உணவு), விசயம்(கருப்பஞ்சாறு, கருப்பட்டி, கரும்புப்பாகு உணவு) என்றெல்லாம் உணவினை அழைப்பர். (ப.பாண்டியராஜா,2022)

எடுத்துக்காட்டுகள் நீளும்.

**மீண்டும் அதே கேள்வி உண்ணாத இறைவனுக்கு ஏன் உணவு வைக்க வேண்டும் ? ஏன் நீர் உணவின்றி**
**“சிறப்பொடு பூசனை செல்லாது”** (வான் சிறப்பு குறள் எண்:18)?
**“எங்கும் நிறைந்த ஓரிறைப்பரம்பொருள்,
பொறிவாயில் ஐந்தவித்தான்”** (கடவுள் வாழ்த்து குறள்:6)


உண்பதில்லை. முற்றிலும் உண்மை.

பின்பு ஏன் தெய்வ அடியார்கள், சங்கப்புலவர்கள் இறைவனுக்கு உணவு வைத்து வழிபட வலியுறுத்துகின்றனர் என்பது தான் கேள்வி?

இதற்குப் பதில் நமது இறைவழிபாட்டில் வானுலகர், அருந்தவத்தவர், முனிவர்கள், சித்தர்கள், சிவகணங்கள், வந்து பூசை வழிப்பாட்டினை ஏற்று, நாம் அளிக்கும் உணவை அருந்துவர் என்பது தமிழர் கண்ட பெரு மரபு.

**எடுத்துக்காட்டு 1:**

திருமுருகன் தமது ஆட்சியில் உள்ள, கணத்தொகுதி (சிவக் கண கூட்டம் திருப்புகழ் 788) மகிழ்வோடு உண்பதற்கு அழைப்பதை தலத்திலுள கணத்தொகுதி களிப்பினுண



வழைப்பதென... (திரு அருணகிரிநாதர், திருவகுப்பு, 3 - வேல் வகுப்பு 10)

(5ஆம் பக்கம் பார்க்க)

## இறந்தவர்கள் உண்பார்களா...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

**"கூறி மேலும் திருமுருகன் வேல் , என்றும்,
பசித்தலகை முசித்தழுது முறைப்படுதல்
ஒழித்தவுணர் உரத்துதிர நிணத்தசைகள்
புசிக்கவருள் நேரும்"** (திரு அருணகிரிநாதர் ,திருவகுப்பு,3 - வேல் வகுப்பு 4)

அலகை (பேய்கள்), பசி கொண்டு மெலிந்து அழுது புலம்பி 'எங்கள் பசி தாங்க முடியவில்லையே' என முறையிடுதலை அறவே நீக்கி, அவுணர்( அசுரர்களின்) உடலின் இரத்தம் தோய்ந்த,கொழுப்போடு சேர்ந்த மாமிசத்தை அப்பேய்கள் உண்ண மறக்கருணையால் உடன்படும் என்பார் திரு அருணகிரிநாதர் .

**எடுத்துக்காட்டு 2:**

வேள்வித்தீயில் படைக்கும் பொருள்கள் வேகும்போது ஏற்படும் மணமே தேவர்களுக்கு உணவாகிறதாம். இதனை நாற்ற உணவு என்கிறார் சங்கப் புறநானூற்றுப்புலவர்.

**"வாடாப் பூவின் இமையா நாட்டத்து
நாற்ற உணவினோரும்"** - புறம் 62: 16,17

அதுபோல

**'நாற்ற உணவின் உருகெழு பெரியோர்க்கு'** என்கிறது மதுரைக்காஞ்சி (458)

**எடுத்துக்காட்டு 3:**

**"இடு பலி(பிச்சையாக இடும் உணவு) உண்ணும் பிச்சாண்டி (சிவபிரான்)
இலரென விடுபலி யவரிடை மருதினை"** (திருஞானசம்பந்தர் 1.112.3)

உணவின்மையால் பசியோடுள்ளார் என மகளிர் இடும் பலியை ஏற்பார்

**"தலைகல னெனநனி கடைகடை தொறுபலி யிடுகென முடுகுவர்"** (திருஞானசம்பந்தர் 1.112.4)

வெண்மையான தலையோட்டை உண்கலன் எனக் கொண்டு பலகாலும் வீடுகள்தோறும் சென்று பலி இடுக என விரைந்து செல்பவரும் ஆவார்.

**எடுத்துக்காட்டு 4:**

அவி உணவு உண்ணும் விரிசடை நந்தி கணங்களை நமக்கு எடுத்துக்காட்டுவதோடு, பரம்பொருள் ஓரிறையின் அருளைப் பெறும் உண்மையினை நமக்கு எடுத்து ஓதுகிறார் திருமூலர்:

**வேட்டு அவி உண்ணும் விரிசடை நந்திக்கு** - திருமந்:1824/1
**ஊட்டு அவி ஆவன உள்ளம் குளிர்விக்கும்** - திருமந்:1824/3
**பாட்டு அவி காட்டுதும் பால் அவி ஆகுமே** - திருமந்:1824/4
**ஓம் மேவும் ஓர் ஆகுதி அவி உண்ணவே** - திருமந்:237/4
**அவி மந்திரத்தின் அடுக்களை கோலி** - திருமந்:359/2
**அவி கொண்ட சோதிக்கு ஓர் அர்ச்சனை தானே** - திருமந்:1243/4
**காய்ந்த அவி நெய்யுள் கலந்து உடன் ஓமமும்** - திருமந்:1366/3
**அவி இன்றிய மனமாதிகள் ஐந்தும்** - திருமந்:2589/2
**நண்ணும் பிற தாரம் நீத்தார் அவித்தார்
மண்ணிய நைவேத்தியம் அனுசந்தான** - திருமந்:1007/1,2

அதுபோல பன்னூறு தெய்வப்பாடல்கள், சங்கப் பாடல்கள் ஞானியர்களால், தமிழ் பேரறிஞர்களால் நமக்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அத்தோடு நில்லாது இறைவழிபாட்டில் நமது பூசையை ஏற்று, உணவு உண்டு தெய்வ அருள் செய்யும் வானுலகர் , அருந்தவத்தவர், முனிவர்கள், சித்தர்கள், சிவகணங்களின் இயல்புகளும் வலியுறுத்தப்பட்டு உணர்த்தப்படுகின்றன. அவற்றின் பொருள்கள் என்ன?

தமிழர் மரபு உயிர்ப்புல கூர்வு அறிவியலில் ( psyche field evolutionary science ) உருவாகிய செம்மை மரபு என்பதாகும். ஆனால் இன்று உயிர்ப்புல கூர்வு அறிவியலின் ஏரணங்கள் ( psyche field evolutionary science logics ) மெய்ப்பொருள் ஆய்வாக வளர்க்கப்படாது முடங்கிக் கிடப்பது தமிழ் மரபு வளமைக்கு ஓர் இடர்வே. விரிக்க நீளும் என்பதால் அவை நிற்க.

### 4. மூலத்தில் இறந்தவர்கள் உண்பார்கள் என்ற ஆழ்நோக்குச் சிந்தனைத் தமிழ் தொல்குடி மக்களின் நம்பிக்கையாக மட்டும் வரம்பில் படாது, அதனைக் கடந்து

**"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்"** (கொல்லாமை குறள் எண்:322) மரபினைப் பெரிதும் வழுத்தும் அறத்தின் பாற்படும் வாழ்வியலாகும்.

முதலில் இறந்தவர்கள் உண்பார்கள் என்பது தமிழர்கள் கண்ட உயிர்ப்புல கூர்வியலில் ( psyche field evolution) தேற்றப்படும் ஓர் ஆகம அறிவியலின் உறுதிப்பாடாகும். உயிர் காட்சிக்கு மட்டுமல்ல, அளவைக்கும் ஆட்படாத ஒரு தனிமம் என்பதால், உயிரியல் அறிவியலோடு (Biological Science) புதுவ அறிவியலின் (modern science), உயிர்ப்பியல் ஆய்வு முடங்கிவிட்டது. ஏன்? ஆனால் காட்சிக்குப் படாத காலம் (invisible time), அறுதியற்ற காலம் (time is not absolute) எவ்வாறு அறிவியலாகியது?

எடுத்துக்காட்டாக இடார்வின் பரிணாம அறிவியல் (Darwin evolutionary science ) உடல்கூறு அறிவியலோடு முடங்கிவிடும். ஆனால் தொல்காப்பிய ஆறறிவு அறிவியலோ உயிர்ப்புல கூர்வில் (psyche field evolution) ஐம்புல தன்மாத்திரையின் வழி ஆராயப்படுவது. இவை இரண்டிற்கும் பெருத்த வேறுபாடுகள் உள்ளன. ரெனே டெகார்ட்ஸ் René Descartes (1596 - 1650) போன்ற மெய்மவியலாளர் (philosopher) ஏற்று வெளிக்கொணர்ந்த, தமிழர் உயிர் உடல் இருமை (duality) கோட்பாட்டு ஆகம அறிவியலை, இன்றும் உயிர் இருப்பியல் (psyche existentialism) வழியும் உயிர்ப்புல ஆகுதலின் (psyche becomingness field) வழியும் வெளிக்கொணர இயலாது இருப்பது , புதுவ அறிவியலின் (modern science) அளவையியல் சுணக்கமேயல்லாது வேறல்ல.

தெளிவுக்காக இறந்தவர்கள் உண்பார்கள் என்ற உறுதிப்பாடு, நம்மை என்ன செய்யத் தூண்டும்?

அதன் பயன்களைச் சீர்தூக்கிக் காண்போம்.

1. முதலில் இறந்தவர்கள் உண்பார்கள் என்ற உறுதிப்பாடு, இறந்தவர்களுக்கு படையல் உணவளிக்கும், மரபிற்குள் நம்மை ஆட்படுத்தி,மறைமுகமாக படையல் இடுவதை ஒரு கட்டாயத்திற்கு உந்தி வலியுறுத்தி நிற்பதை நாம் காணலாம்.ஏன்? 'பிற உயிர் உறவுக்கு' நாம் செலுத்தும் அன்பினை உறுதிசெய்வதாக படையல் இடும் மரபு நம்மை



உந்தி தள்ளுகின்றது.

2. இயல்பாகவே படையல் உணவு என்பது ஒரு கொடை அல்லது தான தரும செயலாகவே பெயர்ந்து நிற்கின்றது.

3. உடல் நீத்தவர் படையலை உண்பார்கள் என்பதால் அப்பயன் நேரே இறந்த அவ்வுயிர்களைச் சார்ந்துவிடும். இதற்கு நம்பிக்கை மட்டுமே சான்றாகுவதாக எண்ணி, உயிர்ப்புல கூர்வு ( psyche field evolution) அறிவியலை நுட்பமாக ஆய்வு செய்யாது, வெறுமனே மூட நம்பிக்கை என்று கண்டதே காட்சிக் கொண்டதே கோலம் என்பதற்கு இணங்க மறுத்து **'போலி பகுத்தறிவாதிகள்'** மறுதலிப்பர். படையலின் இயல்பை ஊக்குவிக்க இயலாத கருத்துக்களால் ஆவது என்ன ?

இவர்களின் மறுதலிப்பு, **'பிற உயிருக்குப்'** படையல் என்ற பகுத்துண்டு வாழ்தலை, தான தரும செயலை மறைமுகமாக முற்றுகையிட்டு நிறுத்தும் செயலாகிவிடும்.

4. இயல்பில் தனக்கு அல்லாத ஒரு **'படையல் உணவு'** கட்டமைவில் தானாகவே பிற உயிருக்கு சேர்க்கப்படும் செயற்பாங்கினை உருவாக்கிவிடுகின்றது. எடுத்துக்காட்டாக இறந்தவர்கள் உண்பார்கள் என்று ஏற்க மறுப்பவர்களும் படையல் மரபைப் பேணுவார்களேயானால், அவ்வாறு படையலை இட்டு , மற்றவர்களுக்கு தானம் செய்வது ஒரு சிறப்பாகிவிடுகின்றது. இல்லையேல் தாங்களே உண்பார்களே யானாலும் அதுவும் விரயமன்று. அதுவும் இல்லையேல், விலங்குகளுக்கு அது உணவாக அளிக்கப்படுவதும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலாகுவதை, யார் மறுக்க இயலும்.

5. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்ற சிந்தனையே கொல்லாமை மரபு, புலால் மறுப்பு மரபிற்குத் தோற்றுவாய் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

6. தாங்கள் படைக்கும் படையல் ஒரு நல்ல தரமான உணவாக இருக்க வேண்டும் என்ற முயற்சி இம்மரபின் இயல்பாக அமைகின்றது. .

7. இம்மரபு நெறிப்பட்ட உணவு உண்ணும் செயல் முறைகளை உருவாக்க, வளர்க்க மேலும் வித்திட்டிருப்பதைக் காணலாம்.எடுத்துக்காட்டாக: நோன்பு, கொல்லாமை மரபு, புலால் மறுப்பு, அதற்கும் மேலாக பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் மரபுகள் ஆகும்.

8. இதன் வழி உலகில் ஏன் மற்ற சமயத்தினரிடம் குறிப்பாகக் கொல்லாமை மரபு, புலால் மறுப்பு போன்ற இப்பண்பாடுகள், சிறக்காமல் போனது என்பதையும் சிந்திக்கவும்.

9. யாராக இருப்பினும் அவர்கள் உண்ணும் உணவைத் தான் மற்றவருக்கு உண்ணக் கொடுக்க இயலும். புலால் உண்பவர்கள், உயிர்களைப் பலியிட்டுப் படையலிட்டு மற்றவர்களோடு பகுத்துண்பதை ஒரு வகை பிற மனிதவுயிர் ஓம்பும் பரிணாம வளர்ச்சியாகவே நம்மால் காண முடிகின்றது. யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி ( திருமந்திரம் 10.1.19.2). புலால் உயிர்ப்பலி படையலை குற்றமாகப் பேசும் போலி பகுத்தறிவாதிகள் பெரும்பாலோர் கொல்லாமை, புலால் மறுப்புகளுக்கு அந்நியமானவர்களே. உண்மையில் அவர்கள் புலால் உயிர்ப்பலி படையலைப் பற்றிப் பேசுவதற்கு எந்தத் தகுதியும் அற்றவர்களாவர்.

10. புலால் உண்போரை முறையே சிறுகச்சிறுக நெறிப்படுத்த இயலும் ஒரு சிறந்த வழி, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பச்செய்தலாகும். மேற்கத்திய மெய்மவியலாளர் (philosopher) ஜீன்-பால் சார்த்ரே (1905 - 1980) இதனைப் 'பிறருக்கான இருப்பியல்' என்பார். Jean-Paul Charles Aymard Sartre (1905 – 1980) a theme embodied in his principal philosophical work Being and Nothingness is Existentialism Is a Humanism (L'existentialisme est un humanisme, 1946) -Being-for-others (être-pour-autrui): Here a new dimension arises in which the self exists as an object for others. Each For-itself seeks to recover its own Being by making an object out of the other. தமிழர் மரபில் அருவமாக நிற்கும் இறந்த உயிர்களுக்குக் கொடுத்துப் பின்பு தேவர்களுக்கும், தெய்வங்களுக்கும், இறைவனுக்கும் படைக்கப்படும் உணவுகள் பலியிடுதலி லிருந்து சிறுகச்சிறுக பத்தியம் பின்பு மரக்கறி, சமையாவுணவு, மூலிகை, நோன்பு உணவு என்று தமிழர்கள் காயசித்தி உணவு பரிணாம வளர்ச்சியாகப் பரிணமித்துச் செல்லும் பக்குவ முறைப்பாடாகும். திருமூலர் விளம்புவது போல உடம்பை வளர்த்து, உயிர் வளர்க்கும் உபாயம் அறிந்து (திருமந்திரம் 10.3.13.1), முறை முறை மெய்ஞானம் சேரும் பரிபக்குவ முயற்சியாகும்.

தாங்கள் உண்ணும் உணவு எதுவாயினும் சரி (புலால், மரக்கறி) பிற உயிருக்குப் படைத்து, பின்பு அவற்றைத் தாம் பகிர்ந்துண்பது எவ்வளவு பண்பட்ட சிந்தனை. 'பிற உயிருக்கு' என்ற உணர்வு பின்பு தான தருமங்களைப் பேண ஊக்குவிக்கும் ஓர் உணர்வாகுவதை நாம் மறுப்பதற்கில்லை. உள்ளத்தில் தெய்வ உணர்வு தோன்றப் பல்லுயிர் ஓம்புதல் இயல்பாகுவதால், உணவு பரிணாம வளர்ச்சி செவ்வனே நடந்தேறும். தமிழர்களால் ஆராதித்து, போற்றி காக்கப்படும், தென்புல வழிபாட்டு தமிழ் மயங்கா மரபின் ஆழ் உளவியலும் இதுவேயாகும். இதை எவரேனும் மறுக்க இயலுமா? அல்லது புறக்கணிக்கத் தூண்டுவோரை ஆதரிக்க முடியுமா?

ஆகவே தென்புல வழிபாடு தமிழர் பெரு மரபு. அந்த மரபைத் தமிழர் பண்பாடு அறிந்தவர்களே மறைமுகமாக மறுப்பது, "ஏளனம் செய்யத் தூண்டுவது" ஏற்கக்கூடியதல்ல. பல்லாயிர தமிழர்களின் தமிழ் மரபு நம்பிக்கையைத் தூ ரறுக்கும் (வேரறுக்கும்) முயற்சியைக் கடிதல் வேண்டும்.

சங்கத்தமிழ், சித்தாந்தம், தேவாரம், திருமந்திர உயிர்ப்புல கூர்வு அறிவியல் (psyche field evolutionary science ) என்ன என்பதைத் தமிழ்ப் பண்பாடு, சமய பகுத்தறிவு பேசுவோர் தெளிவற கற்று தெளிந்திருப்பார்களானால், தமிழர்கள் கண்ட சூக்கும காய அறிவியலைத் நன்முறையில் தெளிவாக்கி, தமிழ் மரபைக் காக்கச் சரியாக மக்களுக்கு வெளிக்கொணர இயலும். அவர்கள் செய்கிறார்களா? அவர் செய்யவேண்டும் என்பது நமது ஆவா.

### மேற்கோள்கள்

1. Stevens and Anthony (2006), 'The archetypes',in Papadopoulos, R. K. (ed.) The Handbook of Jungian Psychology Theory, Practice and Applications. Routledge.

2. ஆனந்த ராசன், (2004), சிவஞான பாடிய நுண்பொருள் விளக்கம், அருள்நந்தி சிவம் புத்தக நிலையம்.

3. சிவகுமார் இராமகிருஷ்ணன் (2022a), தமிழர் கால ஏரண மெய்யறிவு தொகுதி 1: புறக்காலத்தியல், உலகனார் ஆகம அறிவியல் மையம்.

4. சிவகுமார் இராமகிருஷ்ணன் (2022b), தமிழர் கால ஏரண மெய்யறிவு தொகுதி 2: அகக்காலத்தியல், உலகனார் ஆகம அறிவியல் மையம்.

5. ப.பாண்டியராஜா,(2022) சங்கச் சொல்வளம் http://sangacholai.in/Essays-1.7.html.

(முற்றும்)

திருச்சிற்றம்பலம்

# யாழ். இந்துக் கல்லூரி ஞானலிங்கேச்சர பெருமானின் நான்காம் ஆண்டு சங்கு நீராட்டு (04-11-2022)



# கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் சிவன் திருக்கோயிலுக்கான அடிக்கல் நாட்டல் (08-11-2022)



# இராசவல்லிபுரம் அகிலாண்டேசுவரி உடனுறை அக்கினிசுவரர் திருக்கோயில், திருக்குடநீராட்டை முன்னிட்டு திருப்பணிகள் ஆரம்பம்



எண்திசை பாலகர்களில் தீயின் கடவுளாக இருக்கும் அக்கினித்தேவர், சிவபெருமானுடைய திருநடனக் காட்சியை காணும் பொருட்டு இத்திருத்தலத்திலேயே சிவபூசை செய்து வழிபட்டார். இவ்வாறு அக்கினித்தேவர் சிவபூசை செய்து வழிபட்டதால் இத்திருத்தல இறைவன் 'அக்கினிசுவரர்' எனும் திருப்பெயரால் அழைக்கப்படுகின்றார். இத்திருத்தல இறைவியார் அகிலாண்டேசுவரி எனும் திருப்பெயரால் அழைக்கப்படுகின்றார். அக்கினிசுவாரப் பெருமானும் அகிலாண்டேசுவரி அம்மையாரும் மேற்கு நோக்கி காட்சி தருகின்றனர். இறைவியார் சுதந்திர சத்தியாக சுவாமியின் வலப்புறத்தில் தனி கற்கோயிலில் வீற்றிருக்கின்றார். இராசவல்லிபுரம் கிராமத்தில் இத்திருக்கோயிலானது அக்கினித் தேவருடைய திசையான தென்கிழக்குத் திசையில் அமைந்திருப்பதும் சிறப்பம்சமாக அமைகிறது.

இத்திருக்கோயிலில் பல கல்வெட்டுக்கள் கண்டெடுக் கப்பட்டுள்ளது. கருவறைகளை சுற்றியும் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டிருப்பதை இன்றளவிலும் காணக்கூடியதாக உள்ளது. இதனடிப்படையில் இராசவல்லிபுரத்தை ஆட்சி செய்த வல்லப பாண்டிய மன்னன் காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டதாக கூறப்படுகின்றது. மேலும் அவருடைய சந்ததியில் வந்த மாறவர்மன் சுந்தர பாண்டியன், குலசேகர சுந்தரபாண்டியன் ஆகியோருடைய காலகட்டமான கி.பி 13 - 14 நூற்றாண்டுகளில் பல திருப்பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகின்றது.

### திருக்கோயில் தல புராணம்

" நீ உள்ளது என்று அன்று நானும் உளன் அன்று முதல் நீங்காமல் என் இடத்தே
நேசம் வைத்தே நீ இருக்க நான் மலமாகி நின்றது ஏது உடல் எனக்கு அங்கேயும்
உறை எங்ஙனே வினை கடரும் எனில் அவைகள் ஏறிடாத நுவிலாமல்
எட்டாத கேவல மிருப்பமேல் அவை கன்ம மாகாவ இச்சை கண்டு
காயம் அது அளிப்பது எனில் இன்பு துன்புற முண்டு கன்மமேதி தனை அருள்வாய்
ககன முகடும் கடந்துஅளவில் புவனங்களும கரை புரண்டு எங்கும் ஓங்க
ஆயு மறை காணாது அகண்டமாய் நின்ற திருஅக்கினீசுரர் மருவு நீள்
அருள் ஞான வாரியே ராசை மேவிய செல்வ அகிலாண்டம் என்னும் அரசே"



கி.பி. 18ஆம் நூற்றாண்டில் அவதரித்து தமிழுக்கும் சைவத்துக்கும் அரும்பெரும் அற்புதங்களாக விளங்கும் பற்பல நூல்களை அருளிச்செய்த 'தவத்திரு. மாதவ சிவஞான சுவாமிகள்', தனது ஏழாவது வயதில் செப்பறைபதி செல்வ அகிலாண்ட நாயகி திருப்பதிகம் பாடி அருளியுள்ளார். இப்பதிகம் சைவ சித்தாந்தத்தின் சாரம் என்றால் மிகையாகாது.



இத்திருக்கோயிலில் தினமும் தேவாரம் பூசனைகள் நடைபெற்று வருகின்றன. மேலும் ஐப்பசித் திங்கள் உத்தரம் நாண்மீன் நன்னாளில் அம்மையாருக்கு திருக்கல்யாண திருவிழாவும் தைப்பூச தினத்தன்று சுவாமி அக்கினிசுவரருக்கு 10 நாள் திருவிழாவும் நடைபெற்று வருகிறது. இது இராசவல்லிபுரத்தில் சிறப்பு பெரும் நாட்களாக கருதப்படுகின்றது.

இத்தகைய வரலாற்று பெருமைமிக்கத் திருக்கோயிலா னது, திருப்பணிகள் மேற்கொண்டு திருக்குடமுழுக்குச் செய்வதற்குத் திருவருள் கூடியுள்ளது. இதன் தொடக்க விழாவாக கடந்த ஐப்பசித் திங்கள் 27,28 ம் நாள்களில் (நவம்பர் 13,14) பாலாலய நிலைப்படுத்தல் திருப்பணிகள் இடம்பெற்றிருந்தது. இந்நிகழ்வில் செங்கோல் ஆதீன குருமகா சன்னிதானம் மற்றும் தருமையாதீன திருச்சி மௌன மட தம்பிரான் சுவாமிகள் ஆகியோர் கலந்து கொண்டு வழிபாடு ஆற்றியிருந்தனர்.

### மேற்கொள்ள உள்ள திருப்பணிகள்

1. திருக்கல்யாண மண்டபம், வாகன மண்டபம், சங்கிலி மண்டபம் மேற்கூரை தளம் அமைத்தல்
2. அம்பாள் சன்னதி மேற்கூரை தளம் அமைத்தல்
3. அம்பாள் சன்னதி கொடிமர மண்டபம், அலங்கார மண்டபம், முன்மண்டபம் மேற்கூரை தளம் அமைத்தல்
4. சுவாமி சன்னதி மேற்கூரை தளம் அமைத்தல்
5. சுவாமி சன்னதி கொடிமர மண்டபம், தைப்பூச மண்டபம், முகப்பு மண்டபம் மேற்கூரை தளம் அமைத்தல்
6. சுவாமி சன்னதி கருவறை,கருவறை மண்டபம், பெரு மண்டபம் சுவர் உட்புறம், வெளிப்புறம் சண்டிகேசுவரர் சன்னதி வரை வடக்கு உட்வீதி சுவர்களில் சுண்ணாம்பு நீக்குதல்
7. சண்டிகேசுவரர் சன்னதி, உட்வீதி கீழ்ப்புறம், தென்புறம் சுவர்களுக்கு சுண்ணாம்பு நீக்குதல்
8. அம்பாள் சன்னதி கருவறை, கருவறை மண்டபம், பெரு மண்டபம் உட்புறம், வெளிப்புறம், சண்டிகேசுவரி சன்னதி, உட்பிரகாரம் சுண்ணாம்பு நீக்குதல்
9. சுவாமி சன்னதி கொடிமர மண்டபம் முதல் தைப்பூச மண்டபம் வரை, மேற்கு பகுதி தூண்கள், சுவர்கள் சுண்ணாம்பு நீக்குதல்
10. சுவாமி சன்னதி கொடிமர மண்டபம் முதல் திருக்கல்யாண மண்டபம் வரை, மேற்குபகுதி, தூண்கள், சுண்ணாம்பு நீக்குதல்
11. வாகன அறை, எதிர் மண்டபம், மேற்கூரை, தூண்கள் சுண்ணாம்பு நீக்குதல்
12. அம்பாள் சன்னதி கருவறை, கருவறை மண்டபம், பெரு மண்டபம் உட்புறம், வெளிப்புறம், மேற்கூரை, தூண்கள் சுண்ணாம்பு நீக்குதல்
13. அம்பாள் சன்னதி வீதிச் சுவர் உட்புறம், வெளிப்புறம், பள்ளியறை சுண்ணாம்பு நீக்குதல்
14. அம்பாள் சன்னதி கொடிமர மண்டபம் சுண்ணாம்பு நீக்குதல்
15. அலங்கார மண்டபம், சுவாமி சன்னதி, அம்பாள் சன்னதி, வாசல் மண்டபம் சுண்ணாம்பு நீக்குதல்
16. சுவாமி சன்னதி உட்வீதி கருங்கல் தளம் அமைத்தல்
17. சுவாமி கோயில், பரிவார சன்னதி, கருவறை, கருவறை மண்டபம், பெரு மண்டபம், கருங்கல் தளம் அமைத்தல்
18. சுவாமி சன்னதி கொடிமர மண்டபம், தைப்பூச மண்டபம், கருங்கல் தளம் அமைத்தல்
19. சுவாமி சன்னதி கொடிமர மண்டபம் முதல் திருக்கல்யாண மண்டபம், எதிர் மண்டபம், வாகன அறை கருங்கல் தளம் அமைத்தல்
20. அம்பாள் சன்னதி உட்வீதி, கருவறை, கருவறை மண்டபம், பெரு மண்டபம், கருங்கல் தளம் அமைத்தல்
21. அம்பாள் சன்னதி கொடி மரம் முதல் முன் மண்டபம், அலங்கார மண்டபம் கருங்கல் தளம் அமைத்தல்
22. சுவாமி விமானம் புனரமைத்தல்
23. அம்பாள் விமானம் புனரமைத்தல்
24. சாலை கோபுரம் புனரமைத்தல்
25. மின்சுற்று திருத்தங்கள்
26. நிர்ப்பாய்ச்சல் குழாய்கள், வாய்க்கால்கள் திருத்தம்
27. வாகனங்கள் புதுப்பித்தல்



எனவே பத்தர்கள் அனைவரும் இத்திருப்பணியில் பங்கு கொண்டு, அகிலாண்டேசுவரி உடனுறை அக்கினிசுவரப் பெருமானின் திருவருள் பெற்று உய்வோமாக.

"ஞாலம் நின்புகழே மிக வேண்டும்
தென்ஆலவாயில் உறையும் எம் ஆதீயே! "

திருச்சிற்றம்பலம்

தொகுப்பு - சிவத்திரு. தென்னாடு நிலவன்

# ஈழத்து சித்தர்கள்: தவத்திரு தருமன் சுவாமிகள்

## தன் வாழ்க்கைப் பயணத்தை துறவுப் பாதையில் அமைத்துக் கொண்ட தருமன் சுவாமிகள்

**(சென்ற திங்கள் தொடர்ச்சி)**

மிகவும் உயர்ந்த முறையில் துறவுப் பாதையில் செல்ல தருமு தன்வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொண்டான். தோற்றத்தால் துறவு கொள்ளவில்லை. உள்ளத்துறவு கொண்டான். பகலிலும் இரவிலும் தனிமையில் அமர்ந்து செபத்தையும் பூசையையும் செய்து வந்தான். அதற்கேற்ற இடமும் வாய்த்தது. வருடத்தில் மூன்று நாட்களுக்கு மாத்திரம் திறந்து பூசையும் விழாவும் நடத்தும் முத்துமாரியம்மன் கோயில் தருமுவின் சாதனைக்குரிய இடமாகியது. விழா நாட்கள் தவிர மற்றைய நாட்களில் பெரியவர்களோ குழந்தைகளோ அப்பக்கம் திரும்பியும் பார்ப்பதில்லை. தனிமையில் செல்ல அவர்களுக்கு ஒருவித பயமும் ஏற்பட்டது, அதனால் அப்பக்கம் திரும்பியும் பார்க்காமலே செல்வார்கள். வருடத்தில் 362 நாட்கள் பயத்தோடு வாழ்ந்து மூன்று நாட்கள் பத்தி செலுத்துவார்கள். இதுதான் பயபத்தியோ என்று நான் சிந்திப்பதுண்டு.

சாப்பாடு நேரந் தவிர மற்றைய நேரம் எல்லாம் கோயிலிலேயே கழிந்தது. சாப்பாட்டு நேரத்திற்குச் செல்லாவிட்டால் தாயார் துன்பப்படுவார். தன்னைத் தேடிவந்து விடுவார் என்ற பயத்தினாலேயே நேரத்திற்கு நேரம் தவறாது வீட்டிற்குச் சென்று வந்தார்.

தருமு சாதனை முறைகளைப் பயிலும் வழியை நன்கு அறிய முடியாது ஏமாறினான். மனம் நேர் எதிராகச் செல்ல விரும்பியது. கட்டுக்கடங்காத குதிரையைப்போல் மனதை நேர்மையான பாதையில் செலுத்த விரும்பினான். பூசைக்காகவோ, செபத்திற்காகவோ, பாராயணம் செய்தற்காகவோ அரைநாழிகை நேரம் மனம் ஒருமைப்படாது திண்டாடினான். கோயிலில் உடல் இருந்தது உண்மை தான். மனம் துள்ளிக் குதித்தது. கடவுள் ஒருவர் இருக்கிறாரா என்றும் மனதில் சந்தேகம் எழுந்தது. என்றும் தோன்றாத தீய எண்ணங்களும் வாதங்களும் தோன்றலாயின. மனக் குதிரை கட்டுக்கடங்காது ஓடிற்று.

ஒவ்வோர் சமயம் கடவுளை எண்ணி அழுவான். கெஞ்சுவான். மனதின் உறுதியின்மையை நீக்கி உறுதி ஏற்படுமாறு அருள்புரிய வேண்டும் என வேண்டுவான். வேண்டுகோள் வீண்போகவில்லை. மனம் மெதுவாகப் பழைய பாதையை நோக்கித் திரும்பிற்று. மெதுவாகப் போனபோக்கில் விட்டுத்தான் மனக்குதிரையைப் பழக்கி அடக்கித் தன் வழிக்குக் கொண்டுவர வேண்டும் என்பதை அனுபவத்தில் உணர்ந்தான். கவனத்துடன் மனதைச் சீரான நிலைக்குக் கொண்டுவந்தான். தீய எண்ணங்கள் வந்தபடியே மறைந்தன. இன்பத்தையும் மெல்ல மெல்லமாக உணரத் தலைப்பட்டான்.

திடீரென நிலைமை மாறியது. பழைய குருடி கதவைத் திறவடி என்ற நிலைமைக்கு மனம் திரும்பியது. உடல்நலமும் உலகின்பங்களும் தருமுவின் மனதைச் சூழ்ந்து கொண்டன. அற்பமான பொருளைத் தானும் பிறருக்குத் தியாகம் செய்ய மனம் மறுத்தது. கடவுளைத் தியானிக்க உட்கார்ந்தால் இன்பப் பொருள்கள் அகக்கண்முன்பு தாண்டவம் ஆடின. பழைய வீட்டை சீர்ப்படுத்துகையில் முன்பிருந்ததைவிட அதிகமான கேட்டை அடைந்துதான் வீடு புதுமையைப் பெறும் என்பது தருமுவுக்குத் தெரியாது. எரியும் விளக்கு அணையும்போது அதிகமான ஒளியுடன் எரிந்த பிறகுதான் அணைவதுபோல், தீய எண்ணங்கள் மனதைவிட்டு முற்றிலும் அழிந்து போகையில் இப்படித்தான் அதிகமாகத் தோன்றும் என்பதும் தருமுவுக்குத் தெரியாது. ஆதலால் அவன் நடுங்கிப் போனான். நான் உயர்வுபெற முயன்று முன்பிருந்த நிலையைவிடத் தாழ்வான நிலைமைக்கும் போகாமலிருக்க வேண்டுமே என்று கவலை தோன்றிற்று. செபம், தியானம், பாராயணம் முதலியவற்றைச் செய்வதற்கு முன்பிருந்த நிலைமையே போதும் என்றுகூட எண்ணிவிட்டான். கீழ்நிலைக்குப் போகாமலாவது காத்தருளுமென்று கடவுளிடம் அழுது வேண்டினான்.

இவ்வளவு கலக்கம் ஏற்பட்டும் சாது கூறிய பாதையை மட்டும் தருமன் விடாமல் பற்றிக் கொண்டான். உண்மைப் பற்றின்றி தியானம் செய்து யாது பயன்? என்ற எண்ணம் தோன்றும். ஆனால் அவன் அறியாத ஓர் அவா மறுபடியும் தூண்ட செபம் முதலியவற்றைத் தவறாது செய்து வந்தான். முடிவில் நாட்கள் செல்லச் செல்ல விருப்பமின்றியே செய்ய வேண்டிய தினக்கடன்களின் நிலைமைக்கு செபம் முதலியவற்றைக் கொண்டு வந்துவிட்டான்.

திங்கள்கள் கழியவே ஆராய்ச்சி அறிவு வெற்றி பெற்றது. புற இன்பங்களின் பற்றுக் கயிறுகள் நைந்துபோயின. அமைதி அன்னை காட்சி அளித்தாள். சினம் எங்கோ மறைந்து கொண்டது. தான் அமைதியின்றித் தவித்த நிலைமையைக் குறித்துத்தானே சிரித்துக் கொண்டான். பிறந்த குழந்தை நிலைமையில் அப்போதுதான் இருந்ததாக தருமன் உணர்ந்தான். பிறருக்குச் சேவைபுரிவதிலும் பிறரிடம் அன்புப் பெருக்கைத் தடையின்றிச் செலுத்துவதிலும் இணையற்ற இன்பத்தை உணர்ந்தான். உடலையும், தன்னுடையது என்ற எண்ணத்தையும் மறந்தான்.

தான் பசியுற்றிருக்கையில், வேறொரு எளியவனுக்கு அவ்வுணவை அளித்து அவன் புசிக்கையில் தான் பசியற்றுப்போவதாக உணர்ந்தான். குளிர்காலத்தில் தன் ஆடையைப் பிறருக்குக் கொடுத்து அவன் குளிரின்றி மகிழ்கையில் தான் குளிரின் துன்பத்தை இழந்ததாக எண்ணி மகிழ்ந்தான். தோட்டத்து மக்கள் தருமனுக்கு மூளைக்கோளாறு ஏற்பட்டு விட்டதெனப் பேசலாயினர். உண்மையில் பித்தனுடைய தன்மை தருமுவிடம் இருந்தது. எங்காயினும் உட்காருவான். எங்கு வேண்டுமாகிலும் படுத்துக் கொள்வான். வாய் எதையோ முணுமுணுத்துக் கொண்டே இருக்கும். எவரைக் கண்டாலும் காரணமின்றித் திடீரென சிரிப்பான் அல்லது அழுவான். அல்லது கால்களில் வீழ்ந்து வணங்குவான்.

இந்த நிலையில் பூசை பாராயணம் எல்லாம் எங்கோ பறந்துவிட்டன. வீட்டிலுள்ளவர் ஏனைய முயற்சிகளையும் செய்து பார்த்தனர். பயனொன்றும் ஏற்படவில்லை. இனி ஒழுங்குபடுத்த முடியாதென நம்பிக்கையை இழந்து விட்டனர். இப்படி உலகினருக்கு தருமு பித்தனாகவே இருந்தான். எங்கு வேண்டுமானாலும் உட்கார்ந்து மணிக்கணக்கில் கண்களை மூடிக்கொண்டே இருப்பான். எப்பொழுதாவது நடக்கத் தொடங்கினால் நடந்து கொண்டே இருப்பான். எவராவது அணைத்துப் பிடித்து உட்கார வைத்த பிறகு தான் உட்காருவான். ஏதாவது பொருளிற்கு எந்த இடத்திலாவது அமர்ந்து கொண்டு பூசை செய்வான். தான் செய்வது என்ன? என்பதும் அவனுக்குத் தெரியாது. பித்தம் முதிர்ச்சி பெற்றுவிட்டதென மக்கள் எண்ணினர். எவருக்கும் துன்பத்தை விளைவிக்காத பித்தனாக தருமு இருந்தான். நாள் முழுவதும் ஒரே இடத்தில் உட்கார்ந்திருப்பான். எவராவது தின்பண்டத்தைக் கொடுத்தால் புசிப்பான். நீரைக் கொடுத்தால் குடிப்பான். தானாக எதையும் வேண்டுவதில்லை. செய்வதுமில்லை.

மெதுவாகப் சில நாட்கள் கழிந்தன. மறுபடியும் நிலைமை மாறிற்று. மௌனமாக இருப்பதை ஒழித்தான். பேசத்தொடங்கினான். பூசை, செபம், பாராயணம் முதலியவற்றை ஒழுங்காகச் செய்து வந்தான். பிறருடைய கேள்விகளுக்கு அன்பொழுக விடை பகன்றான். பித்தம் குறைந்துவிட்டதென மக்கள் எண்ணினர்.

இத்தருணத்தில் முத்துமாரியம்மன் கோயிலின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு மூன்று நாள் நிகழ்ச்சிகளுக்கு என்னை கங்காணியார் அழைத்திருந்தார். தருமுவைக் காணவேண்டும் என்ற ஒரே ஆசை என்னைப் பிடித்து உந்தித் தள்ளியது. விழாவிற்கு முதல் நாளே சென்று சேர்ந்துவிட்டேன்.

என்னைக் கண்டதும் ஓடி வந்து கட்டித் தழுவினான். சுக நலம் எல்லாம் விசாரித்தான். மூன்று நாள் திருவிழாவிலும் ஒவ்வொரு மணித்தியாலம் அருமையாகப் பசனை செய்தான். பசனைப் பாடல் பாடும் போது இவ்வுலக நினைவின்றியே இருந்தான். எனது அருகிலேயே மான் தோலை விரித்துத் துயின்றான். நான் விழித்த நேரம் எல்லாம் தியானத்திலேயே இருப்பதைக் கண்டேன். மூன்று நாட்களும் என்னோடு உண்டு என்னோடு உறங்கி என்னோடு எழுந்து எல்லாக் கருமங்களிலும் சந்தோசமாக ஈடுபட்டான்.

நான்காம் நாள் எல்லாரிடமும் விடைபெற்றேன். தருமு தோட்ட எல்லை வரையில் வந்து வழி அனுப்பி வைத்தான். அன்று தொடக்கம் தருமு வீடு திரும்பவே இல்லை. இரவு பகலாக நடந்து கொண்டே இருந்தான். பொழுது சாயும் வரை வீடு திரும்பாததால் மறுநாள் வரக்கூடும் என்று எண்ணினர். அக்கம் பக்கங்களில் விசாரித்தனர். எவ்வித தகவலும் இல்லை. சிலசமயம் என்னுடன் வந்திருக்கலாமோ என்று எனக்குக் கடிதம் எழுதினர். உண்மை நிலையை விளக்கிக் கடிதம் ஒன்று எழுதினேன். தருமு இவ்விடம் வரவில்லை. அவர் மிக உயர்ந்த ஆத்மீக நிலையில் உயர்ந்து விட்டார். அவரை நம்மால் விளங்கிக் கொள்வதே கடினம். அவரைப் பற்றி நீங்கள் எவ்விதத்திலும் கவலை அடைய வேண்டியதில்லை என்று எழுதினேன்.

பல தோட்டங்களுக்கூடாக தருமுவின் பிரயாணம் நடைபெற்றது. கால் ஆற விரும்பினால் ஒரு இடத்தில் உட்காருவார். படுக்க விரும்பினால் அந்த இடத்திலேயே படுப்பார். யாருடனும் எவ்வித பேச்சும் இல்லை. மயிலாடித் தோட்டத்துப் பெரிய ஆலமரத்தடியில் வந்து தங்கினார். அங்கு இருக்க வேண்டும் போல் தோன்றியது. இருந்தார். கண்களை மூடினார். ஆழ்ந்த தியானத்தில் இருந்தார். சாது ஒருவர் ஆடாமல் அசையாமல் அன்ன ஆகாரமின்றி சாந்தத்தில் இருக்கிறார் என்ற செய்தி சூழலில் உள்ள தோட்டங்கள் பலவற்றுக்கும் பறந்தன.

கற்பூரம் எரித்தார்கள். தேங்காய் உடைத்தார்கள். பழமும் சில்லறைகளும் குவிந்தன. அவை எவற்றிலுமே சாது சம்பந்தப்பட்டதாகத் தெரியவில்லை. சிலர் பால் கொண்டு வந்து காத்திருந்தனர். இரவு பகல் எல்லாம் ஒன்றுபோல் அவரது வாழ்வு இருந்தது.

முடிவில் அன்பர்கள் வாயைத் திறந்து பால் குடிக்க வைத்தனர். தாமே வாயையும் கழுவினர். இவை எதுவுமே அவர் அறியார். இம்முறையில் 2,3 திங்கள்கள் கழிந்தன. ஒரு சிலர் அவரைத் வணங்குவதால் தமக்கு திருவருள் பேறு ஏற்படும் என்ற நோக்கத்தோடு வந்தனர். வணங்கி ஆறுதல் பெற்றுச் சென்றனர். வேறு சிலர் சாமியார் வாய்திறந்து பேசுவார் தமக்கு ஏதாவது நல்ல வார்த்தை சொல்லுவார் என்று காத்திருந்து ஏமாந்து சென்றனர். இன்னும் சிலர் தீரா நோய்களைத் தீர்க்க வல்லவர் என்று நோயாளரை அழைத்து வந்தனர். அவரை வணங்கிச் சென்ற நோயாளர் சிலர் சுகம் பெற்றனர். இதனை அறிந்து பலருடைய கூட்டம் பல்கியது.

ஒரு நாள் அன்பர்கள் உணவை ஊட்டுவதற்காக அழைத்தனர். தியானம் கலையவில்லை. அசைத்துப் பார்த்தனர். ஏனைய முயற்சிகளும் வீணாயின. வருத்தத்துடன் திரும்பினர்.

மறுநாளும் வந்து பார்த்தனர். பயனில்லை. வழக்கம்போல் 20 நாட்களுக்குப் பின்னர் ஒரு நாள் அன்பர்கள் வந்து உடலைத் தொட்டு அசைத்துப் பார்த்தனர். உடல் குளிர்ந்திருந்ததைக் கண்டனர். உடல் கட்டையாகி விட்டதை உணர்ந்தனர்.

தருமனுடைய உடலைச் சமாதி வைத்து அதன்மேல் குடிசையும் கட்டினர். உருண்டையான கல் ஒன்று கொண்டு வரப்பட்டு சிவலிங்கம் நாட்டிப் பூசனைகள் செய்யத் தொடங்கினர். கோயிலும் தருமலிங்கம் என்றே பெயர் பெற்றது. தருமனிடம் உபதேசம் பெற முடியாதவர்கள் தருமலிங்கத்திடம் அருள் பெற்று வருகிறார்கள்.

(தருமன் சுவாமிகளின் பயணம் முற்றும்)

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம் : ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்**
**தொகுப்பு : சிவத்திரு.வடிவேலு கங்காளன்**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று:

# எம்பிரான் திருஞானசம்பந்தன்

### பாடலால் ஓடம் உய்த்தது

பிள்ளையார் திருக்கூட்டத்தோடு பாண்டிநாட்டைக் கடந்து, சோழநாட்டை அடைந்து, திருக்களர், திருப்பாதாளீச்சரம் முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு, முள்ளி வாய்க்கரையை அணைந்தார். அங்கே ஆறு மிகப் பெருகுதலால், நீர்வாணர்கள் ஓடத்தை ஓடக்கோல் நிலையில்லாமை பற்றிக் கரையிலே நிறுத்திப் போய்விட்டார்கள். பிள்ளையார் அதுகண்டு கரையிலே எழுந்தருளி நின்றபோது, திருக்கொள்ளம்புதூர் எதிரே தோன்ற் அங்கே சென்று சுவாமியை வணங்குவதற்கு திருவுளம் விரும்புதலால், அதிசீக்கிரம் ஓடத்தின் கட்டை அவிழ்த்து, சிவனடியார்களை அதிலே ஏற்றி, நாவலமே கோலாக அதன்மேல் நின்று,


**"கொட்டமேகமழும் கொள்ளம் பூதூர்**
**நட்டம் ஆடிய நம்பனை யுள்கச்**
**செல்ல வுந்துக சிந்தை யார்தொழ**
**நல்கு மாறருள் நம்பனே."**

என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார். பரமசிவனுடைய திருவருளினால் ஓடஞ்சென்று மற்றக்கரையை அடைந்து. பிள்ளையார் அடியார்களுடனே இறங்கித் திருக்கோயிலை அடைந்து சுவாமியை வணங்கி, அங்கே எழுந்தருளியிருந்தார்.

சிலநாளாயின பின், வாதிலே அக்கினியில் எரியாத திருப்பதிகத்தையுடைய கடவுளை வணங்க விரும்பி, திருக்கொள்ளம் புதூரை நீங்கி, திருநள்ளாற்றை அடைந்து, சுவாமியை வணங்கி, **"பாடகமெல்லடி"** என்னும் வினாவுரைப் பதிகம் பாடி, சிலநாள் எழுந்தருளியிருந்தார்.

### அப்பர் பெருமான் பல்லக்கு தாங்கியது

பிள்ளையார் அவ்விடத்தினின்று நீங்கி, திருக்கடவூரிலே சென்று, சுவாமியை வணங்கிவிட்டு, அங்கே எழுந்தருளியிருந்தார். சிலநாளாயின பின், திருநாவுக்கரசுநாயனார் திருப்பூந்துருத்தியில் இருத்தலைக் கேள்வியுற்று, அவரைக் காண விரும்பி திருப்பூந்துருத்திக்கு புறப்பட்டார். அதைத் திருநாவுக்கரசு நாயனார் கேட்டு மனமகிழ்ந்து, அவரை எதிர்கொண்டு வணங்கும்படி சென்று, அவர் வரும் எல்லையை அடைந்து, திருச்சின்னத்தின் ஓசையைக் கேட்டு அவரை வணங்கும்படி சூழ்ந்த அடியார்களுடைய நெருக்கத்தினாலே, தம்மை ஒருவரும் காணாதபடி உட்புகுந்து அவர் ஏறிவரும் முத்துச்சிவிகையைத் தாங்குகின்றவர்களோடு தாமும் ஒருவராய்த் தாங்கி கொண்டு வந்தார்.





பிள்ளையார் திருப்பூந்துருத்திக்கு மிக அண்மித்தவுடனே **"அப்பர் எங்குற்றார்"** என்று வினாவ, அதைக் கேட்ட அப்பமூர்த்தி **"அடியேன் தேவரீரைத் தாங்கிவரும் பெருவாழ்வைப் பெற்று இங்குற்றேன்"** என்றார். உடனே பிள்ளையார் சிவிகையினின்றும் இறங்கி மனப்பதைப் போடும் அப்ப மூர்த்தியை வணங்க, அப்பமூர்த்தியும் தம்மை அவர் வணங்குதற்கு முன் தாம் அவரை வணங்க, அதுகண்ட அடியார்கள் எல்லோரும் வணங்கி ஆனந்தக்கூத்துக்கள் செய்தார்கள். பிள்ளையார் அப்ப மூர்த்தியோடும் திருப்பூந்துருத்தியிற் சென்று, சுவாமியை வணங்கிக் கொண்டிருந்தார்.

பிள்ளையார் தாம் பாண்டி நாட்டிற்கு சென்று சமணர்களை வாதில் வென்றதையும், பாண்டியனுடைய கூனை நிமிர்த்தியதையும், அந்நாடெங்கும் விபூதியை வளர்த்ததையும், மங்கையர்க்கரசியார், குலச்சிறைநாயனார் என்கின்ற இருவருடைய பெருமையையும், அப்பமூர்த்திக்குச் சொல்லியருளினார். அப்பமூர்த்தி தாந்தொண்டை நாட்டுக்குச் சென்று அங்குள்ள சிவத்தலங்களை வணங்கியதைப் பிள்ளையாருக்குச் சொல்லியருளினார். அப்பமூர்த்தி விடைபெற்றுக் கொண்டு, பாண்டிநாட்டுக்குப் புறப்பட்ட பிள்ளையார், காவேரிக்கு வடகரையிற் சென்று, திருநெய்த்தானம், திருவையாறு, திருப்பழனம் முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு, சீர்காழியை அடைந்து, சுவாமியை வணங்கி திருப்பதிகம் பாடிக் கொண்டிருந்தார்.

திருச்சிற்றம்பலம்

மூலம் - திருஞானசம்பந்தர் வாழ்வியல் அற்புதங்கள்

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு அல்லியங்கோதை உடனுறை தியாகராசர் (புற்றிடங்கொன்றார்) திருக்கோயில்-திருவாரூர் (திருமூலட்டானம்)

## (தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 87ஆவது திருக்கோயில் - திருவாரூர்)

ஆர்+ஊர் ஆரூர். **'ஆர்'** என்பதற்கு அழகிய, நிறைந்த போன்ற பல்வேறு பொருட்கள் உள்ளன. இவற்றால் **"திருவாரூர் எல்லாம் நிறைந்த அழகிய ஊர்"** என்று விளங்குகிறது. எனவே, எம்பெருமான் தியாகேசராய், சோமசுகந்த மூர்த்தியாய் அமர்ந்து அருள்பாலித்து அடியார்களுக்குப் பேரின்பம் தரும் அருள்நிறைந்த அழகிய இத்தலத்திற்கு **'திருவாரூர்'** எனும் பெயர் சாலப் பொருத்தமாகும். திருவாரூர் தற்போது மாவட்டத் தலைநகராக விளங்குகிறது. இத்தலத்தின் வடபால் சுக்கானாறும் தென்பால் ஓடம் போக்கியாறும் ஓடுகின்றன.

திருவாரூர் தொன்மைச் சிறப்பு வாய்ந்த தலமாகும்.

**"திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே
வேதத்தை விரிப்பதற்கு முன்னோ பின்னோ
விழவாரூர் கோயிலாக் கொண்ட நாளே
அம்பலத்தே மன்னிக்கூத்தை ஆடுவான் புகுவதற்கு
அணியாரூர் கோயிலாக் கொண்ட நாளே முன்னோ பின்னோ."**

என்று அப்பர் பெருமான் பாடிப் பரவியுள்ளமையிலிருந்து, கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்பே ஆரூர் திருக்கோயில் திகழ்ந்த பாங்கை அறிய முடிகிறது.

**'பிறக்க முத்தி தரும் தலம்'** திருவாரூர் ஆகும். திருவாரூரில் பிறந்தவர்கள் அனைவருமே சிவகணங்களாகப் போற்றப்படுகின்றனர்.

**"செல்வந் திகழ் திருவாரூர் மதில்வட்டத்துட்
பிறந்தார் செல்வன் திருக்கணத்து உள்ளவரே."** என்ற நம்பியாண்டார் நம்பிகளின் திருவந்தாதியும்,

**"திருக்கயிலை வீற்றிருந்த சிவபெருமான் திருக்கணத்தார்**



**பெருக்கிய சீர்த்திருவாரூர்ப் பிறந்தார்கள்."** என்ற சேக்கிழாரின் பெரியபுராணமும் இதனை உணர்த்தும். திருவாரூர்த் தலம் என்னற்ற பெருமைகளைக் கொண்டதாகும்.

சைவ சமய மரபில் சிதம்பரம், 'கோயில்' என்றும், திருவாரூர், **'பூங்கோயில்'** என்றும் வழங்கப் பெறுகின்றன. சங்ககாலச் சோழ மன்னர்களின் (முசுகுந்தன்) தலை நகராகவும், பிற்காலச் சோழர்கள் முடிசூட்டிக் கொள்ளும் திருநகராகவும் திருவாரூர் விளங்கியுள்ளது. திருவாரூர், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறப்புற்று விளங்குகிறது. திருவாரூர் ஐம்பெரும் பூதத் தலங்களுள் நிலத் (மண்) தலமாகும். இத்தலத்தில் அமைந்துள்ள குளம், வாவி (செங்கழுநீர் ஓடை) கோயில் ஆகிய ஒவ்வொன்றும் ஐந்து வேலி பரப்பளவைக் கொண்டதாகும். **"குளம் வாவி மதில் வேலியாம் திருவாரூர்த்தியாகர்-"** என்கிறது எல்லப்ப நயினாரின் திருவாரூர்க் கோவை.

திருவாரூர் **'ஆழித்தேர்'** உலகப் புகழ் பெற்றது. **"திரு வாரூர்த் தேரழகு"** என்பது உலக வழக்காகும். **"ஆழித் தேர் வித்தகனை யான்கண்டது ஆரூரே"** என நாவுக்கரசர் குறிப்பிடுகிறார். சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடுவதற்கு இத்தலமே காரணமாக விளங்கியது.

சைவ சமயக் குரவர்கள் நால்வராலும் பாடப்பெற்ற தலம். அருணகிரிநாதர், இராமலிங்க அடிகளார், குமரகுருபரர், மீனாட்சி சுந்தரம் பிள்ளை போன்றோர் பாடி மகிழ்ந்த ஊர் திருவாரூர். மேலும் சிவபெருமானையே தோழராய்க் கொண்ட நம்பியாரூரன் எனும் சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான் பெருமாள் நாயனார், சத்தி நாயனார், தண்டியடிகள், திருநீல கண்ட யாழ்ப்பாணர், ஏயர்கோன் கலிக்காம நாயனார். முதலானவர்களின் வரலாற்றுடன் மிகவும் தொடர்படையது. 'சப்த விடங்கத் தலங்கள்' என்று அழைக்கப்படும் ஏழு



ஆரூரா தியாகேசா

தலங்களுள் திருவாரூர் முதன்மையானதாகக் கருதப்படுகிறது. காவிரித் தென்கரைத் தலங்களுள் 87ஆவது தலமாகவும், திருவாசகத் தலமாகவும், திருவிசைப்பா தலமாகவும் மற்றும் பன்னிரு திருமுறைகளிலும் பாடப்பட்டத் திருத்தலமாகும்.

**அமைவிடம்:** திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.

மயிலாடுதுறை - திருத்துறைப்பூண்டி, தஞ்சாவூர் - திருத்துறைப்பூண்டி தொடர்வண்டிப் பாதையில் உள்ள தொடர்வண்டி நிலையம். மயிலாடுதுறை, தஞ்சை, காரைக்கால் முதலிய பல நகரங்களிலுமிருந்து பேருந்துகள் உள்ளன. சென்னை இராமேசுவரம் ரயில் தடத்தில் சிதம்பரத்தை அடுத்து 80 கி.மீ. தெற்கே அமைந்துள்ள மாவட்டத் தலை நகரத்தில் திருவாரூர் திருக்கோயில் அமைந்துள்ளது.

**இறைவர் திருப்பெயர்:** தியாகராசர், வன்மீகநாதர், புற்றிடங்கொண்டார்,வீதிவிடங்கர்.
**இறைவியார் திருப்பெயர்:** அல்லியம்பூங்கோதை (நீலோத்பலாம்பாள்), கமலாம்பிகை, அல்லியங்கோதை.
**கோயில் மரம்:** பாதிரி மரம்.
**தீர்த்தம்:** கமலாலயம், சங்கு தீர்த்தம், கயா தீர்த்தம், வாணி தீர்த்தம்.
**வழிபட்டோர்:** திருமால், சுந்தரர், மனுநீதி கண்ட சோழன், தண்டியடிகள், கழற்சிங்கர், செருத்துணையார், விறன் மிண்டர், நமிநந்தியடிகள், கமலை ஞானப்பிரகாசர்.
**பாமாலை:** அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர்.

### நாயன்மார்களால் பாடப்பட்டத் திருப்பதிகங்கள்

**திருநாவுக்கரசர் பாடியத் திருப்பதிகம் (21 பதிகங்கள்)**

**மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
மேனியான் தாள்தொ ழாதே
உய்யலா மென்றெண்ணி யுறிதூக்கி
யுழிதந்தென் னுள்ளம் விட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ
மயிலாலு மாரூ ரரைக்
கையினாற் றொழா தொழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வ னேனே.**





**திருஞானசம்பந்தர் பாடியத் திருப்பதிகம் (5பதிகங்கள்)**

**சித்தம் தெளிவீர்காள், அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ, முத்தி யாகுமே.
பிறவி யறுப்பீர்காள், அறவன் ஆரூரை
மறவா தேத்துமின், துறவி யாகுமே.
துன்பந் துடைப்பீர்காள், அன்பன் அணியாரூர்
நன்பொன் மலர்தூவ, இன்ப மாகுமே.
உய்ய லுறுவீர்காள், ஐயன் ஆரூரைக்
கையி னாற்றொழ, நையும் வினைதானே.**

**சுந்தரமூர்த்தி நாயனார் பாடியத் திருப்பதிகம் (8 பதிகங்கள்)**

**இறைகளோ டிசைந்த இன்பம்
இன்பத்தோ டிசைந்த வாழ்வு
பறைகிழித் தனைய போர்வை
பற்றியான் நோக்கி னேற்குத்
திறைகொணர்ந் தீண்டித் தேவர்
செம்பொனும் மணியும் தூவி
அறைகழல் இறைஞ்சும் ஆரூர்
அப்பனே அஞ்சி னேனே.**

(தொடரும்)

திருச்சிற்றம்பலம்

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# சிவபூமியில் சிவனைத் தேடி

## சோழமன்னர் காலத்தில் கட்டப்பட்ட பொலன்னறுவை வானவன் மாதேவி ஈச்சரம்



சோழர் ஆட்சிக் காலத்தில் ஈழநாட்டில் சைவசமய நெறியும், திருக்கோயில் வழிபாட்டு முறைகளும், அதன் பண்பாடுகளும் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தன. சோழப்பேரரசான இராசராச சோழன் தனது எட்டாம் ஆட்சி ஆண்டிலே (933) இலங்கை மீது படையெடுத்து, இங்கு ஆட்சி புரிந்த மிகிந்தனைத் தோற்கடித்து இராசரட்டையைக் கைப்பற்றி தனது பேரரசின் மண்டல ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான். இதனால் ஈழநாடு **"மும்முடிச் சோழ மண்டலம்"** எனும் பெயரால் அழைக்கப்பட்டது. இவ் அரசனைத் தொடர்ந்து இராசேந்திரனின் 36ம் ஆட்சி ஆண்டில் (1017) இலங்கை முழுவதும் சோழரின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. குறிப்பாக (1017-1070) வரை சோழரின் ஆட்சி ஈழ நாட்டில் மூன்று கால் நூற்றாண்டுகள் வரை நீடித்த2து. இக்காலத்தில் தமிழகத்தில் இருந்து பெருந்தொகையான தமிழர்கள் வந்து குடியேறினர், அவர்களுள் அரச நிர்வாகிகள், வணிகர்கள், போர்வீரர்கள், கோயில் தொழும்பு செய்வோர்களும் மற்றும் பிராமணர்கள் முதலானோரும் இருந்தனர். இவர்களின் குடியேற்றம் பொலன்னறுவை, பதவியா, குருநாகல், அநுராதபுரம், மாதோட்டம், திருகோணமலை முதலான இடங்களில் பரவலடைந்து இருந்தன. இத்தகைய குடியேற்றங்கள் ஈழநாட்டின் பல்வேறு நகரங்களிலும் ஊர்களிலும் காணப்பட்டன. இவ்வாறாக சோழர் காலத்துக் குடியேற்றங்களால் பழங்குடித் தமிழ் மக்கள் புதிய சமய உணர்வினையும், கலையார்வத்தையும் பெற்று சைவத் திருக்கோயில் வழிபாட்டில் நம்பிக்கை கொண்டு புதிய சைவ வாழ்வியலை உருவாக்கினார்கள்.

### பொலன்னறுவைக் கோயில்கள்

அநுராதபுர காலத்தின் பிற்பகுதியில் பொலன்னறுவை ஒரு பிரதான நகரமாக வளர்ச்சி பெற்றது. 7ஆம் நூற்றாண்டு முதலாக அது ஒரு படைத்தளமாகவே இருந்தது. அதன் காரணமாக அதற்குக் **"கந்தவுறுநுவர"** என்னும் பெயர் உரியதாகியது. சோழராட்சியில் புலத்தி நகரமான பொலன்னறுவை **"ஜனநாத மங்களம்"** என்னும் மறுநாமம் பெற்று தலைமை நிருவாக நிலையமாக விளங்கியது. சோழர்கள் பொலன்னறுவையை நகரவாக்கமாக வடிவமைத்து குடிகளைக் குடியேற்றி அவர்களின் ஆன்மீகத் தேவையின் பொருட்டும், சோழ மன்னர்களின் சைவ அபிமானத்தாலும், பத்தியின் நாட்டத்தாலும் சைவநெறியை நிலைநிறுத்தும் பொருட்டும், பல சைவ ஆலயங்களைக் கட்டினார்கள். குறிப்பாக இங்கு பதினாறு சைவத் திருக்கோயில்கள் காணப்பட்டதாகவும் அவற்றுள் பத்து சிவன் கோயில்களாகவும், ஐந்து திருமால் கோயில்களாகவும், ஒரு காளி கோயில் என்றும் தொல்லியல் ஆய்வாளர்களால் கூறப்படுகின்றது. இக் கோயில்களில் சோழர்களின் கட்டடக்கலையின் சிறந்த கலைப்படைப்பாக இலங்கையில் இருக்கும் சிவன் கோயில்களுள் மிகவும் சிறப்பு வாய்ந்த கோயில் வானவன் மாதேவி சிவன் திருக்கோயிலாகும். இக் கோயிலின் சிறப்பை இலங்கை தொல்லியல் பேராசான் எஸ். பரணவிதான அவர்கள் கீழ் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

**"இன்று பொலநறுவையில் காணப்படும் கட்டடங்களில் காலத்தால் பழையது மட்டுமன்றி, ஈழத்திலுள்ள சோழர்க் கட்டடக் கலையின் சிறப்பிற்கு சிறந்த எடுத்துகாட்டாகவும் விளங்குவது இவ் ஆலயமாகும்"**

### வானவன் மாதேவி சிவன் திருக்கோயில் அமைவிடம்

பொலன்னறுவை நகரின் அரண்மனை அமைந்த பகுதியிலுள்ள வடகிழக்கு மூலையின் அருகாமையில் அமைந்துள்ளது. ஆலயம் கிழக்கு நோக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது. ஆலய வளாகத்தைச் சூழ செங்கற்களால் அமைக்கப்பட்ட அகலச் சுவர்கள் காணப்படுகின்றது. ஆலயத்தின் முன்புறத்தில் நந்திபீடம், பலிபீடம், கொடிமரம் ஆகியன அமைந்திருக்கின்றது. கோயில் வளாகத்தின் வடகிழக்கு மூலையில் பிள்ளையார் கோயிலும், வடமேற்கு மூலையில் குமாரக் கடவுளின் கோயிலும் அமைந்திருப்பதற்கான ஆதாரங்கள் அங்கு காணப்படுகின்றது.

### நிறுவியவர்

தொல்லியல் ஆய்வாளர்களால் இரண்டாம் சிவாலயம் என்று பெயர் கொடுக்கப்பட்டுள்ள இக் கோயிலின் உண்மைப் பெயர் வானவன் மாதேவி ஈசுவரமாகும். இப் பெயர் அங்குள்ள கல்வெட்டொன்றில் பொறிக்கப்பட்டிருப்பதனால் உண்மையாகின்றது. இங்கு வானவன் மாதேவி எனப்படும் பெயர் மன்னர்களின் அரசிமாருக்கு இடப்பட்ட பொதுப் பெயராகவே கல்வெட்டுக்களில் வருகின்றது. இது பற்றி கலாநிதி. கா. இந்திரபாலா அவர்கள் இலங்கையில் திராவிடக் கட்டடக்கலை என்ற நூலில் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**"சுந்தர சோழனின் மனைவியும் முதலாம் இராசராசனின் தாயாருமான மலைமான் குடும்பத்தைச் சேர்ந்த இளவரசி ஒருத்தியின் பெயராகவும், பின்னர் இராசராசனின் பட்டத்தரசியாகிய முதலாம் இராசேந்திர சோழனின் தாயார் பெயராகவும் அதற்குப் பின்னர் முதலாம் இராசேந்திர சோழன் அரசி ஒருத்தியின் பெயராகவும் வானவன் மாதவி என்ற பெயர் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது."**

இக் கோயிலின் கல்வெட்டில் முதலாம் இராசேந்திர சோழனின் ஆட்சியின் ஆரம்பம் இருப்பதனால் அக்கல்வெட்டின் காலம் அளவிலே இக்கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது பெரும்பாலான தொல்லியல் அறிஞர்களின் கருத்தாகும். அவர்கள் இராசேந்திர சோழனால் அல்லது அவனுடைய அரச பிரதானிகளால் அம்மன்னனுடைய தாயாரின் நினைவின் பொருட்டு ஒரு சிவாலயம் கட்டியிருக்கலாம் என்று கருதுகின்றனர்

### கட்டட அமைப்பு

இக்கோயில் கருவறை, நடு மண்டபம் (அந்தராளம்), கருவறை மண்டபம் (அர்த்தமண்டபம்), மண்டபம், நந்திபீடம், கோபுர வாசல் ஆகிய பகுதிகளுடன் அமைக்கப்பட்டிருந்தது அண்மைக் காலங்களில் கவனக்குறைபாட்டால் சில பாகங்கள் சேதமுற்றுள்ளது. கோயில் கட்டடம் முற்றிலும் கருங்கற்களைக் கொண்டு கற்றளிப் பாணியில் கட்டப்பட்டுள்ளது. சுண்ணக்கல்லும் பாவிக்கப்பட்டுள்ளது. இதன் இறையகம் 20' 6" நீளமும் அகலமும் கொண்ட சதுர அமைப்பு உடையது. இறையகத்தின் மேலே விமானம் 31' 9" உயரங் கொண்டது. ஒவ்வொரு தளத்திலும் சோழர்க் கட்டுமானப் பகுதிகள் காணப்படுகின்றது. இறையகச் சுவர்கள் 12' உயரமானவை, அச் சுவர்களில் தேவ கோட்டங்களும் அமைந்துள்ளன. சுவர்களில் உள்ள அரைத்தூண்களில் தடி, குமுதம், கண்டம் பலகை, பத்ம இதழ், போதிகை என்னும் உறுப்புக்களும் காணப்படுகின்றன. நடு மண்டபம் (அந்தராளம்) 15' நீளமும் 6" அகலமும் கொண்டது, கருவறை மண்டபம் (அர்த்தமண்டபம்) 15' 6" அகல நீளமும் 10' அகலமும் கொண்டது. மண்டபம் 30' நீளமும் 23' அகலமும் கொண்டது

இவ்வாலயச் சிறப்பினைக் கூறவந்த கே. ஏ. நீலகண்ட சாத்திரியார் கீழ் வருமாறு விதந்துரைக்கின்றார்

**"கருங்கல்லினாலும் சுண்ணாம்புக் கல்லினாலும் கட்டப்பட்டுப் பழைய பொலநறுவை நகரில், சுவர் மதில்களுக்கிடையில் இச்சிறிய அழகு மிக்க தேவாலயம் தற்போது நல்ல பாதுகாப்பு நிலையில் காணப்படும் ஒரு சில இந்து நினைவுச் சின்னங்களுள் ஒன்றாகும். இக் கோயிலின் கட்டட அமைப்பு முறை கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட பத்தாம் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கிடையில் தென்னிந்தியாவில் கட்டப்பட்ட இந்துக் கோவிலின் அமைப்பினை ஒத்தது என ஐயமின்றிக் கூறலாம்"**



### கோயில் கல்வெட்டுக்கள்



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

இக் கோயிலில் இராசேந்திர சோழனதும், அதிராசேந்திர சோழனதும் இரு கல்வெட்டுக்கள் காணப்படுகின்றது. இதில் முதலாவது சோழனது கல்வெட்டிலே இராசேந்திரனது மெய்க்கீர்த்திகள் மட்டுமே அழியாது உள்ளன. ஆலய ஊழியம் பற்றிய பகுதிகள் அழிந்து விட்டன.

இரண்டாம் கல்வெட்டு **"பரகேசரி நராயண உடையார் ஸ்ரீ அதிரா ஜெந்திர தெவவர்க்கு யாண்டு கூ ஆவது"** எனக் குறிப்பிடப்படுவதால் அது அதிராசேந்திரனது மூன்றாவது ஆட்சியாண்டில் எழுதப்பட்டுள்ளது எனக்கொள்ளலாம். இக் கல்வெட்டு இக் கோயிலின் நிருவாக முறையினையும் அதற்காக நியமிக்கப்பட்டோரின் விபரங்களையும் சிறப்பாகக் கூறுகின்றது. நந்தா விளக்கு, நிலைவிளக்கு, பொற்காசு என்பன இவ்வாலயத்திற்கு மானியமாக வழங்கப்பட்டதோடு, இவற்றை நிர்வகிக்கும் சிவப்பிராமணர், தில்லை நாயகப்பட்டன், பன்மகேசுவரர், பதிபாத மூலப் பட்டுடைப் பஞ்சாசாரியர் என்னும் ஆலயத் தொண்டர், வேதாகம வித்தர்கள் பற்றியும் குறிப்பிடும் இவர்களோடு தேவரடியவர்களும் கங்கை கொண்ட சோழ மணிகமந்திருவியான கொது குல மாணிக்கம், கூத்தன் இராசேந்திர விடங்கன் மாணிக்கம், கூத்தன் ஆடல் வல்லானான நாற்பத்த தெண்ணாயிர மாணிக்கம், தேவற் காமியான சோழமாணிக்கம், தேவன்



உய்ய வந்தானான முடி கொண்ட சோழ மாணிக்கம் ஆகியோர் திருத்தொண்டு செய்தற் பொருட்டு நியமிக்கப்பட்டிருந்தனர்.

பதி பாத மூலப்பட்டுடைப் பஞ்சாசாரிய தேவ சுவாமிகள், பன்மகேசுவரர் முதலானோர்கள் இவ்வாலயத்தைக் கண்காணிக்கும் உயர் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருந்தனர். எனவே இவ் ஆலய நிர்வாக ஒழுங்கினை, நோக்கும் போது இவ் ஆலயம் அக்காலச் சமுதாய உறவுக்கு அமைய இருந்தமை பற்றியும் ஆலய வழிபாடுகள் சிறப்புற விளங்கியிருந்தமை பற்றியும் அறிய முடிகின்றது.

### சிறப்புக்கள்

தொல்லியல் ஆய்வாளர்களால் சோழர்களின் தொல் பொருட் சின்னங்கள் என திட்டநுட்பமாய் அடையாளம் காட்டப்பட்ட பொலன்னறுவைச் சிவன்கோயில்களுள் இரண்டாம் சிவாலயம் எனச் சுட்டப்படும் இச்சிவாலயம் அழிவுறாது இன்றும் சீரான நிலையில் வழிபடும் நிலையில் நிலைத்துள்ள பழமையான கோயிலாக விளங்குகின்றது. இலங்கையில் சோழர்களின் கலைப்பாணியின் சிறந்த பண்புகளுக்கு சிறந்த கட்டியம் கூறும் சிவாலயமாகவும் விளங்குகின்றது.

"பொலநறுவையிலே அகழ்வாராய்ச்சிகளை ஆரம்பித்த காலத்தில், சுமார் நூறு வருடங்களுக்கு முன்பு, அங்குள்ள கோயில்களில் அதுவே நன்கு பேணப்பட்ட நிலையிலே காணப்பட்டது" என்று பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் குறிப்பிடுகின்றார். பொலன்னறுவையிலே சிங்கள மன்னர்களும் பிறரும் எத்தனையோ சிறந்த கட்டங்களை அமைத்துக் கட்டக்கலையை வளர்த்திருந்தாலும், அந்நகரத்தில் இன்று பூரணமாகக் கல்லினால் கட்டப்பட்டுக் காணப்படும் ஒரே ஒரு கட்டடம் வானவன் மாதேவி ஈசுவரமே.

இலங்கையிலுள்ள மிகப்பழமையான சரித்திரம் வாய்க்கப் பெற்ற இச் சைவத் திருக்கோயிலை சைவர்களாகிய நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டிய காலச்சூழலில் நிற்கின்றோம். இனியும் காலம் தாழ்த்தாது கோயில் திருவிழாக்கள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்து, அங்கு சிவ விரதங்களைக் கடைப்பிடித்து, தமிழில் தேவாரங்களை ஓதி, தமிழால் சிவபெருமானை அர்ச்சித்து ஈழத்துச் சைவமக்களுக்கு இவ் ஈசுவரத்தின் பெருமைதனை அறைகூவுவோம்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

திருச்சிற்றம்பலம்

# தென்னாட்டு நிகழ்வுகள்



ஐப்பசித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடு (05-11-2022)



ஐப்பசித்திங்கள் அன்னத்திருமுழுக்கும் நிறைமதி வெளியீடும் (07-11-2022)



கார்த்திகைத் திங்கள் தேய்பிறை கழுவாய் வழிபாடு (21-11-2022)



திருமூலர் குருபூசை (07-11-2022)



செந்தமிழாகம முறையில் இறுதிச் சடங்கு வழிபாடுகள் (20-11-2022)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் இருபத்து ஏழாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நளி நல்லோரை கார்த்திகைத் திங்கள் 21ம் நாள் நிறைமதி அன்று (07-12-2022 புதன்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org